
ISBN:978-81-687272-8-1

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



இரா தண்டாயுதம்

செந்தமிழறிஞர்கள் 108

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



அண்ணா நூற்றாண்டு நூலகம்
ANNA CENTENARY LIBRARY
DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/159-%E0%AE%87%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BE%E0%AE%AF%E0%AF%81%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D_1939

செந்தமிழ்சிற்பிகள்

இரா.தண்டாயுதம் (1939)



அறிமுகம்

இரா. தண்டாயுதம் (1939) ஒரு தமிழ் எழுத்தாளர், விமர்சகர் மற்றும் மொழிபெயர்ப்பாளர். 1975ன் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றவர்.

வாழ்க்கைக் குறிப்பு

தண்டாயுதம் மலேசியாவிலுள்ள மலாயாப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக வேலை பார்த்தார். அவர் தமிழ் இலக்கியத்தைப் பற்றிய விமர்சன மற்றும் ஆய்வுப் படைப்புகள் பல வெளியிட்டார். அவர் சில புனைவுகளும் எழுதியுள்ளார். அவரது விமர்சனப் படைப்புகள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திலும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலும் பாடத்திட்டமாக்கப் பட்டுள்ளன. தற்காலத் தமிழ் இலக்கியம் என்ற அவரது இலக்கிய விமர்சனம் 1975ன் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றது. மலேசியாவில் அவரது

நினைவாக டாக்டர் தண்டாயுதம் இலக்கியப் பேரவை என்ற இலக்கிய அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

எழுதிய நூல்கள்

அபுனைவு

தற்கால தமிழ் இலக்கியம்

மலேசிய தமிழ் இலக்கிய வரலாறு

எ ஸ்டடி ஆஃப் சோஷியாலஜிக்கல் நாவல்ஸ் இன் தமிழ்

ஆலய வழிபாட்டில் தமிழ்

எ சர்வே ஆஃப் மாடர்ன் தமிழ் லிட்ரேச்சர்

புனைவு

மலரும் மலர்

பொய்யான நியாயங்கள்

(😊)(😊) ஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒஒ (😊)(😊)

வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குரு கதைகள் இலக்கியமில்லையா?
பெருமாள்முருகனின் கருத்தையொட்டி ஒரு கேள்வி!

https://mvnandhini.wordpress.com/tag/%E0%AE%87%E0%AE%B0%E0%AE%BE-%E0%AE%A4%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BE%E0%AE%AF%E0%AF%81%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D/


பரமார்த்த குரு கதை: முன்னோடி முயற்சியாகுமா? என்ற தலைப்பில் எழுத்தாளர் *பெருமாள்முருகன்* எழுதிய கட்டுரையை அவருடைய வலைத்தளத்தில் படித்தேன். பெருமாள்முருகன் எழுதிய கட்டுரையை ஒட்டி சில விளக்கங்களையும் சில வினாக்களையும் முன்வைக்கிறேன். இந்தக் கட்டுரையின் ஊடாக வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குரு கதைகள் தமிழின் முன்னோடி முயற்சியில்லை என்று பெருமாள்முருகன் நிறுவ முயல்வது தெரிகிறது.

”வரலாற்றில் இவ்விதம் வைக்கப்படும் அளவுக்கான நூல்தானா அது? அப்படியானால் அது எங்கே கிடைக்கிறது? நூலகங்களில் பார்க்க

முடியுமா?நூலில் மொத்தம் எத்தனை கதைகள் உள்ளன? பரமார்த்த குரு கதை என்னும் பெயரில் பாட நூல்களில் காணப்படும் கதைகள் வீரமா முனிவர் எழுதியவையா? நூல்களாக வெளியிடப்பட்டு இன்று புத்தகச் சந்தையில் கிடைப்பவை நம்பகமானவையா? இத்தகைய ஐயங்களுக்குப் பதில் சொல்வது என்பது வருத்தப்படுவதாகவே அமையும்.

மூன்று நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட அந்நூலைப் பற்றி விரிவான ஆய்வு தேவைப்படுகிறது. இது தொடர்ந்து அச்சில் இல்லாமைக்கான காரணம் பற்றியும் ஆராய வேண்டும். சிறுவர் கதை நூலாக அதன் தளம் சுருங்கிவிட்ட வரலாறும் பேசப்பட வேண்டும். பரமார்த்த குரு கதை பற்றிய அடிப்படைத் தகவல்கள்கூடப் போதுமான அளவு இல்லை. இக்கதை தழுவல் என்றும் இலத்தீன் – தமிழ் அகராதியின் பின்னிணைப்பாக அவரால் வெளியிடப்பட்டது என்றும் 1728ஆம் ஆண்டு புதுச்சேரியில் அச்சிடப்பட்டது என்றும் கிடைக்கும் தகவல்கள் போதுமானவையாக இல்லை.” என்கிறார் பெருமாள்முருகன் அந்தக்கட்டுரையில்.

தமிழ் இலக்கியம் பயின்றவரான பெருமாள்முருகன், பரமார்த்த குரு கதைகளை முழுமையாக படிக்காமலேயே, இதுதான் பரமார்த்த குரு கதைகள் என்பதில்கூட அவருக்கு நிறைய சந்தேகம் இருக்கும் நிலையில் ஒரு கருத்தை நிறுவ முயல்வது எவ்வகையான ஆய்வுத்தன்மை என்கிற கேள்வி எழுகிறது.


Digital collection of Tamil Heritage Foundation

பரமாறதகுருவின
கதை
முதலாவது
ஆறறைக்கடந்த
கதை.

1800களில் வெளியான *பரமார்த்த குரு கதைகள்* என்ற நூல் தமிழ் மரபு அறக்கட்டளையால் பாதுகாக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது. கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றிய பெஞ்சமின் பபிங்டன் என்பவர் முன்னுரையுடன் இதை பதிப்பித்திருக்கிறார். பெஞ்சமின் குறுகிய காலமே அன்றைய மெட்ராஸ் ராஜதானியில் பணியாற்றியிருக்கிறார். பிறகு, இங்கிலாந்து சென்று மருத்துவம் பயின்றிருக்கிறார். இவர் இங்கிருந்த 1812லிருந்து 1830வரையான காலகட்டத்திலேயே இந்த நூல் வெளியாகியிருக்க வேண்டும் என்று அனுமானிக்கிறேன். இவர் இந்நூலுக்கு எழுதிய முன்னுரையை முக்கியமான ஆவணம் என்பேன். இதில் வீரமாமுனிவர் குறித்தும் பரமார்த்த குரு கதைகள் குறித்தும் இந்த கதைகள் எழுதப்பட்ட தமிழ்மொழி குறித்தும் எழுதியிருக்கிறார். இந்த நூலின் முகப்பில் இருக்கும் தமிழ் மொழியில் ஒரு கதை என்கிற வரிகள், இந்தக் கதைகள் பிரெஞ்சிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதல்ல என்கிற கருத்துக்கு வலுசேர்க்கின்றன. இந்த நூலில் மொத்தம் எட்டுக் கதைகள் மட்டுமே உள்ளன. வீரமாமுனிவர் இவற்றை மட்டும் தான் எழுதினாரா, இன்னும் சிலவற்றையும் எழுதியிருக்கிறாரா என்பதில் மேற்கொண்டு ஆய்வுகள் தேவை. ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது, பின்னாளில் வந்த கதைசொல்லிகள் வீரமாமுனிவரின் அடியொற்றி பரமார்த்த குரு கதைகளை விரிவாக்கியிருக்கிறார்கள். வீரமாமுனிவரின் மொத்த கதைகளும் கிடைக்கும்பட்சத்தில் இந்த மாதிரிகளை இனம்கண்டுவிடலாம்.

1720களில் எழுதப்பட்ட பரமார்த்த குரு கதைகள், கிட்டத்தட்ட 1820வரைக்கும்கூட பேசப்பட்ட படைப்பாக இருந்திருக்கிறது என்பதை பெஞ்சமினின் முன்னுரையிலிருந்து தெரிந்துகொள்ளலாம். **கா.சிவத்தம்பியும் இரா.தண்டாயுதமும் சொன்னதுபோல இது தமிழ் படைப்பிலக்கியத்துக்கு அடிக்கல் இட்ட படைப்பாக இது இருப்பதற்கு சாத்தியப்பாடுகள் அதிகமாகவே உள்ளன.** ஆகவே பெருமாள்முருகனின் கருத்தை பரிசீலிக்க வேண்டியுள்ளது.

இரா. தண்டாயுதம் எழுதிய **"தற்காலத் தமிழ் இலக்கியம்"** (சாகித்திய அகாதெமி விருது பெற்றது) மற்றும் மு. வரதராசனின் **"தமிழ் இலக்கிய வரலாறு"** ஆகியவை தற்கால இலக்கியத்தை அறிய சிறந்த புத்தகங்கள் ஆகும்.


புத்தகத்தின் பெயர்	ஆசிரியர்	குறிப்பு	வாங்கும் இடம்
தற்காலத் தமிழ் இலக்கியம்	இரா. தண்டாயுதம்	சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல். நவீன கவிதை, நாவல், சிறுகதை பற்றிய தெளிவான தொகுப்பு.	Panuval அல்லது Udumalai
தமிழ் இலக்கிய வரலாறு	மு. வரதராசன்	தற்காலம் உட்பட தமிழ் இலக்கியத்தின் முழுமையான வரலாற்றை அறிய உதவும் சிறந்த நூல்.	Amazon.in
தமிழ் இலக்கிய வரலாறு	பேரா. சி. பாலசுப்பிரமணியன்	பல்கலைக்கழகங்களால் பெரிதும் பரிந்துரைக்கப்படும் ஒரு செவ்வியல் நூல்.	CommonFolks

இதர முக்கியப் போக்குகள்:

தற்கால இலக்கியத்தின் புதிய போக்குகள் மற்றும் விமர்சனங்களை அறிய, ஜெயமோகன் அல்லது பாவண்ணன் போன்ற நவீன எழுத்தாளர்களின் விமர்சனக் கட்டுரைகளையும் நீங்கள் வாசிக்கலாம்.

இலக்கிய வட்டம் : ஒரு பார்வை

https://vallinam.com.my/navin/?p=2523




பேராசிரியர் இரா. தண்டாயுதம் அவர்களின் ஆலோசனையில் ரெ.கார்த்திகேசு அவர்கள் முன்னின்று உருவாக்கிய ‘இலக்கிய வட்டம்’ குழுவும் அதன் மூலம் உருவான ‘இலக்கிய வட்டம்’ எனும் காலாண்டு இதழ்களும் அண்மையில் பார்வைக்குக் கிடைத்தன. இதழ்கள் தட்டச்சின் மூலம் நேர்த்தியாக உருவாகியிருந்தன. 70களில் முனைவர் ரெ.கார்த்திகேசு வானொலியில் பணிபுரிந்ததால் எழுத்தாளர்களிடம் கேட்டுப்பெறப்படும் படைப்புகளை வானொலியில் தட்டச்சாளராகப் பணியாற்றியவரிடம் கொடுத்து, தட்டச்சு செய்யப்பட்டதை நகல் எடுத்து அடுத்த கூட்டத்தில் வழங்கி விவாதித்துள்ளனர்.

முதல் இதழ் பிப்ரவரி 1973ல் வெளியிடப்பட்டுள்ளது. முதல் இதழ் அரசாங்க பதிவு எண் இல்லாமல் தனிச்சுற்றாகவே வந்துள்ளது. பின்னர் இவ்விதழ் முறையான அரசாங்க பதிவு எண்ணைப்பெற்று குறிப்பிட்ட வட்டத்தில் மட்டுமே வாசிப்புக்குச் சென்றுள்ளது. அரசுப் பதிவு எண்ணுக்காக எழுத்தாளர் எம்.குமரன் (மலபார் குமார்) முகவரி வழங்கப்பட்டிருந்த சூழலில் உள்ளடக்கச் சாரத்தை ரெ.கார்த்திகேசுவே தீர்மானித்துள்ளார். மே 1974ல் ரெ.கா வானொலி பணியில் இருந்து விலகி பினாங்கு மலேசிய அறிவியல் பல்கலைக்கழகத்தில் இணைந்தபோது இலக்கிய வட்டம் தன் ஆயுளை முடித்துக்கொண்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற இதழ்களைப் பார்க்கையில் பைரோஜி நாராயணன், மெ.அறிவானந்தன், இரா.தண்டாயுதம், வீ.செல்வராஜ், க.கிருஷ்ணசாமி, சி. வடிவேலு, சி. வேலுசாமி, அரு.சு.ஜீவானந்தன், சு.கமலநாதன், சா.அ.அன்பானந்தன், மலபார் குமார், ரெ.கார்த்திகேசு, மை.தி.சுல்தான் எனப் பலரும் பங்களித்துள்ளனர்.

ஜனவரி 1974இல் வெளிவந்த இதழில் இலக்கிய வட்டத்தினரால்



எழுதப்பட்டுள்ள முன்னுரை ஓரளவு அவ்விதழின் நோக்கத்தைக் கூறுவதாய் உள்ளது. 'ஆயிரம் பிரதிகளா, ஐம்பது பிரதிகளா என்பதெல்லாம் முக்கியமான விஷயங்கள் என இந்த வட்டம் கருதவில்லை. சோதனைக்கென தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ள இப்பத்திரிகையை எழுத்தாளர்கள் இருதய சுத்தியோடு பயன்படுத்திக்கொள்வார்களா என்பதைத்தான் வட்டம் கவனித்துக்கொண்டு வருகிறது' என்கின்றனர். தொடங்கிய நோக்கம் கலந்துரையாடல்களைப் பதிவு செய்வதாக இருந்து ஓராண்டுகளுக்குள் இலக்கிய வட்டத்தினர் தமிழ்ச் சிற்றிதழ் மனநிலைக்கு வந்துள்ளதை இவ்வாசகங்களால் ஓரளவு கணிக்க முடிகின்றது.

இலக்கிய வட்டம் திட்டவட்டமான பக்க எண்ணிக்கைகளையும் அமைப்பையும் கொண்டிருக்காமல் சூழலுக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப உருவாகியுள்ளது. படைப்புகளில் கட்டுரைகளின் எண்ணிக்கை அதிகம். அவை பெரும்பாலும் வரலாற்றை மீள்பதிவு செய்வதாக உள்ளன.

இலக்கிய வட்டக் கட்டுரைகள்

பிப்ரவரி 1973 ல் வெளிவந்த முதல் இதழில் டாக்டர் இரா.தண்டாயுதம் 'இலக்கியமும் வாசகர்களும்' எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். வாசிப்பு குறித்தும் வாசகன் குறித்தும் பொதுவான சில கருத்துகளைக் கூறும் அவர், 'இலக்கிய வட்டம், தலைவர், துணைத்தலைவர் எனப் பதவிகள் இன்றிச் செயல்படுவதால் நோக்கம் விலகாமல் தரமான அமைப்பாக உருவாகும்' என்பது கவனிக்கத் தக்கது.

14 பக்கங்களே உள்ள இவ்விதழில் எழுத்தாளர் சி.வேலுசாமி 'உள் நாட்டு எழுத்தாளர்கள் தோற்றமும் அவர்களின் சாதனையும்' என்ற தலைப்பில் தமிழ் நேசன் வகுப்பு, கு.அழகிரிசாமியின் கதை வகுப்பு, மாணவர் மணிமன்ற இதழ், உள்நாட்டு எழுத்தாளர்களின் நூல் வெளியீடு என விரிவாகவே விவரிக்கிறார்.

ஜீன் 1973ல் வெளிவந்துள்ள 'வாசகர் வட்டம்' இதழில் பெருங்காப்பியன் எனும் புனைபெயரில் எஸ்.ஆர்.எம் பழனியப்பன் 'இலக்கியப் பின்னணி' எனும் கட்டுரையை எழுதியுள்ளார். பாரதியார் மற்றும் பாரதிதாசன் கவிதை உலகம் குறித்துப் பேசும் சுருக்கமான கட்டுரை அது.

'பரிசுத்திட்டங்களும் இலக்கிய வட்டங்களும்' என்ற தலைப்பில் அக்டோபர் 1973 இதழில் சி.வேலுசாமியின் கட்டுரை முக்கியமான பதிவு. அக்காலகட்டத்தில் பரிசுத்திட்டங்கள் எவ்வாறான ஊக்கத்தை

எழுத்தாளர்களுக்கு வழங்கின என்று எழுதப்பட்ட விரிவான கட்டுரை இது. கட்டுரையில் 'இலக்கிய வட்டம்', எழுத்தாளர் சங்கத்தின் எதிரி அல்ல என்று திட்டவட்டமாகக் கூறும் அவர், இலக்கிய வட்டத்தில் உள்ளவர்கள் அனைவருமே சங்கத்தின் உறுப்பினர்கள் என்றும் எழுத்தாளர்கள் சந்தித்து உரையாடவே இந்த ஏற்பாடு எனவும் அழுத்தமாகக் கூறுகிறார். மேலும் எழுத்தாளர் சங்கம் இதுபோன்ற குழுக்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் பரிந்துரைக்கிறார். சி.வேலுசாமியின் இக்கட்டுரையில் இன்றைய தலைமுறை அறிந்துகொள்ள சிலவற்றைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

- முருகு சுப்ரமணியன் தமிழ் நேசனில் ஆசிரியராக இருந்த காலத்தில் சிறுகதைகளுக்குப் பணம் வழங்கப்பட்டுள்ளது.
- அரசாங்கத்தால் 'ஜனோபகாரி', 'வெற்றி' போன்ற இதழ்கள் நடத்தப்பட்டு எழுத்தாளர்களுக்குப் பணமும் வழங்கப்பட்டுள்ளது.
- கு.அழகிரிசாமி மலாயாவில் சிறுகதைகளுக்கென பரிசு கொடுக்கும் திட்டத்தைத் 'மலாயா தமிழ்ப்பண்ணை' அமைப்பின் மூலம் முதலில் தொடங்கினார்.
- இலக்கிய வட்டம் போல அதன் பாதிப்பால் நாட்டின் வெவ்வேறு இடங்களில் இலக்கிய வட்டங்கள் தொடங்கப்பட்டன. சுங்கைவே இலக்கிய வட்டம், பட்டாங் பாடாங் எழுத்தாளர் வட்டம், பத்துகாஜா இலக்கிய வட்டம், பத்தாங் பெர்ஜூந்தாய் இலக்கிய வட்டம் என அவற்றில் சில. (ஆனால் அவை இதழ்கள் நடத்தினவா என்ற பதிவு இல்லை).
-

சி.வேலுசாமி அவர்களின் இக்கட்டுரை அக்கால இலக்கிய ஊக்கியாகச் செயல்பட்ட பத்திரிகைகள் அதை முன்னெடுத்தவர்கள் முதல் சிறு சிறு அமைப்புகள் வரை விரிவாகவே விவரிக்கின்றன. கட்டுரை முழுவதும் 'இலக்கிய வட்டம்' எதற்கும் யாருக்கும் போட்டியில்லை என்றும் நாட்டில் இயங்கும் பல்வேறு இலக்கிய வட்டங்களுடனான பிணைப்பும் பகிர்வும் அவசியம் என்றும் தனது விருப்பத்தைக் கூறுகிறார்.



இதே இதழில் க.கிருஷ்ணசாமியின் கட்டுரையும் முக்கியமானது. ‘மலேசியத் தமிழ் நாளிதழ்களைப் பற்றி ஒரு கண்ணோட்டம்’ என்ற தலைப்பில் எழுதப்பட்ட இக்கட்டுரை தமிழ் முரசு, தமிழ் நேசன், தமிழ் மலர் போன்ற அக்காலத்துப் பத்திரிகைகள் எவ்வாறு இந்நாட்டில் இலக்கியத்தை வளர்த்தன என விவரிக்கிறது. செய்திகளை வெளியிடும் ஊடகம் என்ற பிறமொழி நாளிதழ்களின் நிலைப்பாட்டைத்தாண்டி தமிழ் நாளிதழ்கள் இந்நாட்டில் மொழியையும் இலக்கியத்தையும் வளர்க்கச்செய்த பணியை இக்கட்டுரை விவரிக்கிறது. அதோடு மலைநாடு, திருமுகம், நவரசம், தாமரை, மாதவி, மலைமகள் போன்ற இதழ்களின் பங்களிப்பையும் கூறுகிறார். ஆச்சரியமாக, ஞாயிறு மலர்கள் தரமான படைப்புகள் வராத நிலையில் இருப்பதில் பரவாயில்லை என்ற ரகங்களைப் போட்டு நிரப்புவதையும் இக்கட்டுரையில் நாசூக்காகச் சாடுகிறார். கு.அழகிரிசாமியின் வருகை குறித்து எழுத்தாளர் க.கிருஷ்ணசாமியும் சொல்லத் தவறவில்லை. அவர் காலத்திலேயே நல்ல பல எழுத்தாளர்கள் கண்டுப்பிடிக்கப்பட்டார்கள் என கட்டுரையாளர் கூறுகிறார்.

ஜனவரி 1974இல் ‘இலக்கிய வட்டம்’ மூன்று கட்டுரைகளை உள்ளடக்கி வந்துள்ளது. இலக்கியவாதிகளுக்கும் மணிமன்ற இயக்கத்தினருக்கும் நன்கு அறிமுகமான சா.அ.அன்பானந்தன் அவர்கள் இவ்விதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இலக்கியம் என்பது சமூகத்துக்குப் பயன்பட வேண்டும் என்ற அடிப்படையில் எழுதப்பட்ட இக்கட்டுரை அக்காலகட்டத்தில் வாசிக்கப்பட்ட சில படைப்பாளிகளை முன்வைக்கிறார். புதுமைப்பித்தன்,

ஜெயகாந்தன் என நவீன படைப்பாளிகளைக் குறிப்பிட்டு மு.வ வையும் அதே வரிசையில் வைப்பது அவர் விமர்சன ரீதியில் இலக்கியத்தை அணுகாமல் பொத்தாம்பொதுவாக வாசிப்புக்கு உகந்தவைகளை முன்வைப்பது புரிகிறது. சமுதாயத்துக்கு உதவும் எனில் நல்லனவற்றை வாசிக்கலாம் என்பதே அவர் எண்ணமாக இருப்பதை அறிய முடிகிறது.

பைரோஜி நாராயணன் எழுதியுள்ள 'நியூவேவ் கதைகள்' என்ற கட்டுரை இவ்விதழில் என்னை அதிகம் கவர்ந்தது. 'நியூவேவ் கதைகள்' இலக்கியச்சூழலில் புதிய அலை எனத் தொடங்கப்பட்டு ஆபாசங்களும் காமக்கவர்ச்சிகளுமே எஞ்சியதை இக்கட்டுரையில் அவர் குறிப்பிடுகிறார். இதுபோன்ற கதைகளுக்கு ஆனந்த விகடன் இதழ் முக்கியத்துவம் கொடுத்ததைச் சுட்டிக்காட்டும் பைரோஜி நாராயணன் சுஜாதா, புஷ்பா தங்கதுரை போன்றவர்கள் இவ்வகை எழுத்துகளில் முதன்மையானவர்கள் எனவும் கூறுகிறார். பைரோஜி நாராயணன் எந்தக்கருத்தையும் தனது கருத்தாகப் பதிவிடாமல் 'கூறுகின்றனர்', 'கூறப்படுகிறது' என்றே கட்டுரை நெடுகிலும் எழுதிச்செல்கிறார். அப்படிக் கூறிச்செல்கையில், நா.பார்த்தசாரதி 'நியூவேவ் கதைகள்' குறித்து கூறும்போது புதுமைப்பித்தனும், கு.ப.ராவும் இதுபோன்ற பாலுணர்வுக் கதைகளை எழுதியுள்ளதையும் ஆனால் 'நியூவேவ் கதைகள்' கலாபூர்வமாக எழுதப்படாத அரைவேக்காட்டுப் பாலுணர்வுக் கதைகள் என்றதையும் குறிப்பிடுகிறார். கட்டுரையின் இறுதியில் 'நியூவேவ் கதைகள்' புதிய உத்திகளோடு வெளிப்பட்டால் அதை வரவேற்பதில் தவறில்லை என பைரோஜி நாராயணன் கூறுவதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இவ்விதழில் 'தமிழ் எழுத்தாளர் சங்கம் தோன்றிய வரலாறு' எனும் தலைப்பில் எழுத்தாளர் சி. வேலுசாமி எழுதியுள்ள கட்டுரை பல புதிய தகவல்களை எனக்கு வழங்கியது. ஏற்கனவே இதில் உள்ள தகவல்களைப் பலரும் எழுதியிருந்தாலும் நேரடியாக அச்சூழலில் இயங்கிய ஒருவர் சுய அனுபவத்தின் அடிப்படையில் தானே ஆதாரமாக இருந்து எழுதுவது வாசிப்புக்கு நெருக்கமாக உள்ளது. கவனத்தில் வைக்க வேண்டிய சிலவற்றை கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

- கோலாலம்பூரில் 1955ல் இயங்கிவந்த தமிழ்க்கலை மன்றம்10.1955ல் சீன அசெம்பிளி மண்டபத்தில் முதல் எழுத்தாளர் மாநாட்டைக் கூட்டியது. வெளியூர் உள்ளூர் எழுத்தாளர்கள் கலந்துகொண்ட முதல் நிகழ்ச்சி அது.
- 7.1958ல் பங்சார் தமிழ்ப்பள்ளியில் எழுத்தாளர் சங்க அமைப்புக்கூட்டம் முதன் முதலாக நடைபெற்று அதில், சி.வீ.குப்புசாமி தலைவராகவும் திரு. சு.சண்முகம் துணைத்தலைவராகவும் செயலாளராக கட்டுரையாளர் சி.வேலுசாமி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- அக்காலத்தில் சிறுகதை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய சு.நாராயணன் கூட்டத்துக்கு வரவில்லை. ஆனால் 25 பேர் கூடி தலைவரைத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள் என 'மலாயா நண்பன்' சாடியுள்ளார்.
- 2.1959ல் மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. சங்கத்தின் இயக்கத்தில் சுணக்கம் இருந்ததால் 26.3.1963 இல் மறுபதிவு செய்யப்பட்டுள்ளது.
-

ஏப்ரல் 1974 இல் எழுத்தாளர் ரெ.கார்த்திகேசு அவர்களின் கட்டுரையுடன் இதழ் தொடங்குகிறது. இதுதான் 'இலக்கிய வட்டத்தின்' கடைசி இதழாகவும் இருக்கிறது. 'சமுதாயக் குமுறல்களும் எழுத்தாளர்களும்' என்ற தலைப்பிட்ட அக்கட்டுரையில் ரெ.காவின் சில வரிகள் முக்கியமாக கவனிக்கக் கூடியவை.

- எழுத்தாளன் என்பவன் எழுதத்தெரிந்தவனாக இருந்தால் மட்டும் போதாது; அவனுக்குத் தன்னைச் சுற்றி உள்ள சமுதாயத்தைக் கூர்ந்து பார்க்கவும் தெரிந்திருக்க வேண்டும்.
- சமுதாய உணர்வோடு எழுத்துத் தொழிலை மேற்கொள்ளும் எந்த எழுத்தாளனும் இந்தச் சமுதாயக் குமுறல்களை அறிந்து அதனை எழுத்தில் வடிக்கும் பொறுப்பைத் தனதாக்கிக்கொள்ள வேண்டும்.
- எழுத்தாளன் இம்மாதிரி பிரச்னைகளை வைத்துக்கொண்டு பொதுமேடையில் வாதிடுகின்ற பேச்சாளனோ தொண்டனோ அல்ல. சமுதாய குமுறல்களுக்கு தீர்வுகளைச் சொல்வது எழுத்தாளனின் பொறுப்பு அல்ல.
- எழுத்தாளன் செய்ய வேண்டியதெல்லாம் இந்தக் குமுறல்களையெல்லாம் அடையாளம் காட்டி மக்களின் சிந்தனையைத் தூண்டுவதே.
- கதைகளில் அளவான பிரச்சாரம் இருப்பது சிந்தனையைத் தூண்டத் தேவையாகிறது.

எழுத்தாளர் ரெ.கார்த்திகேசு அவர்கள் 1974ல் கூறிய இக்கருத்துகளில் இன்று அவருக்கு மாற்றம் இருக்குமா என்பது தெரியவில்லை. ஆனால் அக்காலத்தில் இக்கருத்துகள் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கக் கூடியவை என எண்ணத் தோன்றுகிறது. இவை விவாதிக்கக்கூடிய கருத்துகளாக இருந்தாலும் 70களில் கார்த்திகேசு புதிய கருத்தாக்கங்களை மலேசியச்

சூழலில் உருவாக்கியுள்ளார் என்பதற்கு இக்கட்டுரை சாட்சியாக உள்ளது. ஒருவேளை ‘இலக்கிய வட்டம்’ தொடர்ந்திருந்தால் படைப்பிலக்கியத்தின் தேவை குறித்தும் எழுத்தாளனின் கடப்பாடுகள் குறித்தும் விரிவான விவாதங்கள் நிகழ்ந்திருக்கும்.

எழுதப்பட்ட கட்டுரைகள் வழி 2016ல் உள்ள ஒரு வாசகனாக என்னால் சில விடயங்களை உள்வாங்க முடிகிறது. இந்நாட்டில் இலக்கியம் வளர தனிநபர்கள் மற்றும் நாளிதழ்கள் பெரும் பங்காற்றியுள்ளன. குறிப்பாக, ஞாயிறு பத்திரிகை ஆசிரியர்கள் முக்கிய இலக்கிய ஆளுமைகளாக இருந்துள்ளனர். ‘இலக்கிய வட்ட’ குழுவினர் அதுவரை இருந்த எந்த இலக்கியப்போக்குக்கும் மாற்றாக இயங்க உருவானவர்கள் அல்ல. அக்காலகட்டத்தில் இலக்கியத்தில் தீவிரமாகவும், தமிழகத்தின் சமகாலத்திய இலக்கியத்தை உள்வாங்கியும் இருந்த ஒரு குழுவினரின் சேர்க்கை. எழுதப்பட்ட பெரும்பாலான கட்டுரைகளிலும் எழுத்தாளர் சி.வடிவேலுவுடனான சந்திப்பிலும் கு.அழகிரிசாமியின் வருகை, அவர் ஓர் இயக்கமாக இருந்ததைத் தெளிவாக விளக்குகின்றன. ‘தமிழாசிரியர்களுக்கு சரியாகத் தமிழே எழுதத்தெரியாது’ என மலேசியா வந்த புதிதில் நாளிதழில் எழுதிய கு.அழகிரிசாமி பின்னாளில் நல்ல எழுத்தாளர்களை அடையாளம் காண்பதிலும் அவர்கள் மத்தியில் படைப்பாளுமையை வளர்ப்பதில் அக்கறை காட்டினார் எனத் தெரிகிறது. எவ்விதப் பொருளியல் லாபமும் இல்லாத சூழலிலும், கலை அல்லது மொழி என்ற ஏதோ ஒரு காரணத்திற்காக ஒருவர் மாற்றி ஒருவர் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் செயல்பட்டது ஒரு கருப்பு வெள்ளைப் படமாக மனதில் பதிகிறது.

இலக்கிய வட்டச் சிறுகதைகள்

ஐந்து இதழ்களிலும் சுமார் 5 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

- பிப்ரவரி, 1973 – வட்டத்துக்கு வெளியே
- ஜூன், 1973 – அவளுக்காக – மைதீ சுல்தான்
- அக்டோபர், 1973 – முனுசாமி தலைகுனிந்து நிற்கிறான் – ரெ.கார்த்திகேசு
- ஏப்ரல் , 1974 – நதிகள் கடலில் கலக்கட்டும் – அரு.சு.ஜீவானந்தன்
- ஜனவரி, 1974 – பத்துரோட்டில் ஒரு கடை இருந்தது – எம்.குமாரன்

வட்டத்துக்கு வெளியே (பிப்ரவரி, 1973) – தன் நண்பனை விமானத்தில் வழியனுப்பித் திரும்பும்போது, யாரோ ஒருவனால் பாலியல் வல்லுறவுக்கு ஆளான பெண் தன் நண்பனிடம் அடைக்கலம் கேட்கிறாள். அந்தரங்க உரையாடல்கள்வரை அவர்கள் நட்பு வளர்கிறது. ஒருசமயம் அடைக்கலம் கொடுத்த நண்பனிடம் 300 ரிங்கிட் பெற்றுக்கொண்ட அவள் கொஞ்சநாள் காணாமல் போகிறாள். பின்னர் சில நாட்களில் திரும்பியவள் வல்லுறவில் பாதிக்கப்பட்டதால் ஏற்பட்ட கர்ப்பத்தைக் கலைத்ததைச் சொல்கிறாள். நாடு திரும்பும் நண்பனைப்பார்க்கச் செல்கிறாள்.

1976ல் 'அட இருளின் பிள்ளைகளே' போன்ற சிறந்த சிறுகதைகளை எழுதியவர் அரு.சு.ஜீவானந்தன். இது அவரது மிகச்சுமாரான சிறுகதைதான். கதையின் இறுதியில் வாசகனுக்கு தான் சொல்ல வருவது புரியுமா என்ற சந்தேகம் தோன்றியிருக்கலாம். போலிஸ், சட்டம் , நீதிமன்றம் என்ற சராசரி வட்டத்திலிருந்து அவள் மாறுபட்டுள்ளாள் எனக் கதாசிரியர் நண்பனின் எண்ணத்திலிருந்து கூறுவது இறுதியில் சொல்லவரும் தகவலை குறிப்பிடுவதாகிறது. அடைக்கலம் தருபவனிடம் அந்தரங்க உரையாடல்கள் மட்டுமே நடக்கின்றன. அதை மீறி அவர்கள் செல்லவில்லை. அரு.சு.ஜீவாவுக்கும் மனித மனம் அதை மீறியும் செல்லும் என்று எண்ணுவதில் தடை உள்ளது.

அவளுக்காக (ஜூன், 1973) – மைதீ சுல்தானின் மொழிநடை எனக்குப் பிடித்தமானது. அவரது மிகச்சில கதைகளையே வாசித்திருந்தாலும் கச்சிதமான வாக்கியங்களில் கதை சொல்லிச் செல்பவர் என மனப்பதிவில் உண்டு. இந்தச் சிறுகதையும் அவ்வாறானதுதான்.

பாருக்கு அடிக்கடி போகும் ஒருவன் அங்கு சேவையில் இருக்கும் பெண் ஒருவளிடம் காதல் வயப்படுகிறான். அவள் மற்றப்பெண்களைப் போல இல்லாமல் தனது 'கற்பை' காத்துக்கொள்வதில் உஷாராக இருக்கிறாள். அவளுக்கும் அவன் காதல் புரிகிறது. ஆனால் நாசூக்காகத் தவிர்க்கிறாள். இறுதியில் அதன் காரணம் புரிகிறது. அவள் அவனை திரைப்படம் பார்க்க அழைக்கிறாள். அவள் தன் இரு குழந்தைகளுடன் வருகிறாள். படத்தில் உள்ள கதையும் அவள் வாழ்வை ஒத்தது என அவனுக்குப் புரிகிறது. அவள் கணவனை விபத்தில் இழந்தவள் . அவள் மாறப்போவதில்லை என விலகி விடுகிறான்.

மைதீ சுல்தான் அவர்களால் இவ்வளவு சம்பவங்களையும் மிக எளிதாகச் சொற்கள் மூலம் அலுப்படையாமல் வாசகனை அழைத்துச்செல்ல முடிகிறது. ஆனால் கதை மிகையுணர்ச்சியை உள்வாங்கிய ஒரு சீரியலாக

மட்டுமே இன்றைய வாசிப்பிற்கு உள்ளதைக் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.

முனுசாமி தலைகுனிந்து நிற்கிறான் (அக்டோபர், 1973) – மிகச்சிறந்த சிறுகதைகளை மலேசியச் சூழலில் எழுதிய ரெ.கார்த்திகேசுவின் சிறுகதை. மருத்துவராக மட்டும் இல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ள தியாகராஜனின் கதை. தன் தந்தை எப்போதுமே மருத்துவம் மூலம் சேவை செய்யத் தயாராக இருந்ததை அடிக்கடி நினைக்கிறார். மருத்துவம் அல்லாத பிற சமூகப் பணிகள் தன் நேரத்தைத் தின்பதை எண்ணி வருந்துகிறார். அப்போதுதான் முனுசாமி என்பவர் கிளினிக் வருகிறார். தனக்குக் குடியுரிமை கிடைக்கத் தியாகராஜனே காரணம் எனவும் அவரே தனக்குக் கடவுள் எனவும் கூறி, தனது குடியுரிமை சான்றிதழை தைப்பூசத்தில் வைத்து வணங்கப்போவதாகக் கூறுகிறார். சென்றவர் சான்றிதழைத் தொலைத்துவிட்டு வருவதும் மீண்டும் தியாகராஜனின் உதவியை நாடுவதும் என கதை முடிகிறது.

கொஞ்சம் ஆழமாகப்பார்க்க வேண்டிய கதைதான். தொழிலைச் சேவையாக்கி முழுமையில் இருப்பவருக்கும் தனியாகச் சேவைசெய்ய முனைந்து நொந்து போகிறவருக்கும் உள்ள வேறுபாட்டைக் கதை காட்டுகிறது. முனுசாமிக்குக் குடியுரிமை பெற எல்லாதகுதியும் இருந்தும் சில பாரங்களை இணைக்காததால் தவிர்க்கப்பட்டுள்ளதும் அதைத் தியாகராஜன் பூர்த்தி செய்து உதவியதால் குடியுரிமை கிடைப்பதும் உண்மையில் பெரிதாக தான் ஒன்றும் செய்துவிடவில்லை என தியாகராஜனுக்கே புரிவதும் கதையில் சொல்லப்பட்டுள்ளது. விழிப்புணர்வற்ற மக்களுக்கு எளிதான உதவிகள் செய்வோர் கடவுளாகிவிடுவதையும் அது அரசியலுக்குத் தேவையாக இருப்பதையும் இன்னொரு கோணத்தில் இருந்தும் பார்க்கலாம்.

ஆனால், எளிய மக்கள் மீது கரிசனை கொள்ளும் எழுத்தாளர் தியாகராஜனுக்கு 'ர்' இட்டு மரியாதையாகக் கதை முழுவதும் விளிப்பதும் முனுசாமியைக் கதையின் தலைப்பில் தொடங்கியே 'ன்' இட்டு ஒருமையில் அழைப்பதும்தான் ஏன் எனப்புரியவில்லை.

நதிகள் கடலில் கலக்கட்டும் (ஏப்ரல், 1974) – அரு.சு.ஜீவானந்தம் அவர்களின் இக்கதையும் சமூகக் கட்டமைப்பில் நம்பப்படும் ஒழுக்க நெறிகளை கொஞ்சம் கடந்து பார்ப்பதைப் பேசுகிறது. சமூக மதிப்புக்காகத் தன்னை தன் எண்ணங்களைச் சுருக்கிக்கொள்ளும் ஒருவன், பின்னர் அதை எதிர்கொள்வதையும் மீறிச்செல்வதையும் எழுதியுள்ளார். அக்காலக்கட்டத்தில் இக்கதைக்கு எவ்வாறான வரவேற்பு இருந்தது எனத் தெரியவில்லை. என் வாசிப்பில் முழுமை பெறாமல் உள்ளது.

பத்துரோட்டில் ஒரு கடை இருந்தது (ஜனவரி, 1974) – எம். குமாரன் மலேசியாவில் குறிப்பிடப்பட வேண்டிய எழுத்தாளர். ஆனால் அவர் எழுதியதில் இது குறிப்பிடப்பட வேண்டிய சிறுகதை அல்ல. வணிகத்தில் வளர்ந்து பின்னர் நொடித்துப்போகும் ஒருவனின் கதை. செம்மண்ணும் நீல மலர்களும் நாவலைப்போலவே வாழ்வின் ஏமாற்றங்களைச் சொல்கிறது. நாவலாக வேண்டியதைச் சிறுகதையாக எழுதியுள்ளார்.

இலக்கியவட்ட இதழில் எழுதியுள்ள சிறுகதை எழுத்தாளர்கள் மலேசியச் சிறுகதை உலகுக்கு மிக நல்ல கதைகளைக் கொடுத்துள்ளனர் எனினும் இது அவர்களின் சிறந்த கதைகள் அல்ல எனக்குறிப்பிட்டாக வேண்டும். கடும் தணிக்கை சூழல் இருந்திருக்கும் அக்கால நாளிதழ்களில், சோதனை முயற்சிக்கான ஒரு தளமாகவே அரு.சு.ஜீவானந்தன் , மைதீ. சுல்தான் போன்றோர் இவ்விதழைப் பயன்படுத்தியுள்ளனர் எனப் புரிந்துகொள்ள முடிகிறது. மேலும் இரா.தண்டாயுதம் அவர்கள் அரு.சு.ஜீவானந்தனின் 'வட்டத்துக்கு வெளியே' எனும் சிறுகதை குறித்து எழுதிய விமர்சனமும் அடுத்த இதழில் இடம்பெறுவது அக்காலக்கட்டத்து வாசிப்பு நிலையையும் உள்வாங்க ஏதுவாகிறது.

பிற ஆக்கங்கள்

மைதீ. சுல்தான், வி.இக்குவனம், கம்போஜா சூரியா, சி.கமலநாதன் போன்றோர் புதுக்கவிதை, மரபுக்கவிதை என சமுதாயத்திற்குக் கருத்துச் சொல்லியுள்ளனர். இலக்கிய வட்ட இதழ்கள் கவிதைக்கோ அது குறித்த உரையாடல்களுக்கோ முக்கியத்துவம் தரவில்லை. அவர்கள் கவனம் சிறுகதை நோக்கியே இருந்துள்ளது. அதேபோல உருவகக்கதை போன்ற முதிர்ச்சியற்ற ஆக்கங்களும் இவ்விதழில் உள்ளது. எழுத்தாளர் சி.வடிவேலு அவர்களின் நேர்காணல் ஓரளவு அக்கால இலக்கியச்சூழலை அறிய உதவுகிறது.

இறுதியாக

மலேசியாவில் இதழியல் மூலம் ஓர் இயக்கமாகச் செயல்பட்டது 'செம்பருத்தி' அதை தொடர்ந்து 'வல்லினம்' என சில கட்டுரைகளில் எழுதியிருந்தாலும் இன்று கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் அதை மீட்டுக்கொள்ள வேண்டியுள்ளது. 'இலக்கிய வட்டம்' மலேசிய நவீன இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு தொடக்கமாகவே இருந்துள்ளது. உரையாடலும் கருத்துப்பரிமாற்றமும் இல்லாத இலக்கிய முயற்சிகள் வளர்ச்சியடையாது என நன்கு அறிந்த அறிவார்ந்த குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட

இம்முயற்சி இன்னும் சிறிதுகாலம் தொடர்ந்திருந்தால் மலேசியாவில் தீவிர இலக்கியத்திற்கான மையமாக ‘இலக்கிய வட்டம்’ இருந்திருக்கும்.

(இலக்கிய வட்டம் இதழ் உருவான வரலாறு ரெ.கார்த்திகேசு விமர்சன அரங்கம் நூலில் எழுத்தாளர் அரு.சு.ஜீவானந்தம் எழுதியிருந்த கட்டுரையில் இருந்தும் அவர் நேர்காணல் வழியும் கூடுதல் தகவல்கள் 5 இதழ்களையும் ஆராய்ந்ததின் மூலமும் கிடைக்கப்பெற்றவை.)

மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் **‘இலக்கிய வட்டம்’** என்பது மிக முக்கியமானது. இது 1950-களில் எழுத்தாளர் **கு. அழகிரிசாமி** மற்றும் 1970-களில் **ரெ. கார்த்திகேசு** ஆகியோரின் வழிகாட்டுதலில் உருவான இலக்கியக் குழுக்களையும், இதழ்களையும் குறிக்கும்.
மலேசிய இலக்கிய வட்டத்தில் இடம்பெற்ற முக்கிய தகவல்கள்:

1. கு. அழகிரிசாமியின் இலக்கிய வட்டம் (1950கள்):
மலேசியாவில் (அன்றைய மலாயா) ‘தமிழ் நேசன்’ இதழில் கு. அழகிரிசாமி ஆசிரியராகப் பணியாற்றியபோது, மலேசிய தமிழ் எழுத்தாளர்களை உருவாக்கவும், அவர்களின் படைப்புகளைச் செப்பனிடவும் 'இலக்கிய வட்டம்' என்ற அமைப்பை உருவாக்கினார். இதன் மூலம் பல புதிய எழுத்தாளர்கள் மற்றும் படைப்பாளிகள் கண்டறியப்பட்டனர்.

2. ரெ. கார்த்திகேசுவின் இலக்கிய வட்டம் (1973-1974):
பேராசிரியர் இரா. தண்டாயுதம் அவர்களின் ஆலோசனையில், ரெ. கார்த்திகேசு என்பவர் மலேசியாவில் 'இலக்கிய வட்டம்' என்ற புதிய குழுவை உருவாக்கினார். தட்டச்சு (typewriter) இயந்திரத்தின் மூலம் உருவாக்கப்பட்ட காலாண்டு இதழ்களை இக்குழு வெளியிட்டது. இதன் மூலம் சிறுகதைகள் விவாதிக்கப்பட்டு, புதிய எழுத்தாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த இதழின் படைப்புகள் பற்றிய விவரங்களை தமிழ் விக்கி தளத்தில் காணலாம். [1, 2, 3]

3. தற்கால இலக்கிய வட்டங்கள்:
தற்போது மலேசியாவில் இணையம் மற்றும் சமூக வலைத்தளங்கள் வழியாக பல இலக்கியக் குழுக்கள் இயங்கி வருகின்றன. மேலும், வல்லினம் போன்ற இலக்கிய இணைய இதழ்கள் மலேசியாவின் தற்கால படைப்பிலக்கியங்களை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்றன.
மலேசிய இலக்கிய வட்டங்களின் வரலாற்றுப் பார்வையை வல்லினம் வலைத்தளம் வாயிலாக விரிவாக அறியலாம்.

01] மலேசியத் தமிழ் வாசகர்கள் - வட்டங்களும் சதுரங்களும்! (நாலு வார்த்தை-041)

https://baalu-manimaran.blogspot.com/2009/01/041.html

மலேசியாவில் நம்பிக்கையளிக்கும் இளையதலைமுறை தமிழ் எழுத்தாளர்கள் பலர் உருவாகி வருகிறார்கள். அவர்களில் சிலர் இன்னும் 10 ஆண்டுகளில் உலகம் முழுவதும் உள்ள தமிழ் வாசகர்களின் மனதில் நிரந்தர இடம் பிடிக்க இருக்கிறார்கள். இது ஆருடமில்லை. ஏற்கனவே முன் வைக்கப்பட்டிருக்கும் ஆதாரங்களின் மேல் எழுப்பப்பட்டு வரும் நம்பிக்கை. இணைய வாசகர்களுக்குப் பரவலாக அறிமுகமான இளைஞர் கே.பாலமுருகன் அவர்களில் ஒருவர். இவரைப் போன்றவர்கள், ஒரு சராசரி வாசகராக உருவாகி, தொடர்ந்த தேடலில் தங்களது மொழித்திறனை மேம்படுத்திக் கொண்டு எழுத்தாளர்களாக உருமாறி இருக்கிறார்கள். வாசகன் என்ற முதல்படியை மிதிப்பதற்கான தளம் அமைத்துத் தர பல நாழிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் மலேசியாவில் இருக்கின்றன. மலேசியத்தமிழ் வாசகர்களை எளிதாக இனம் பிரித்துவிடலாம் என்பது என் அனுபவம். தமிழ்மேல் அளவற்ற ஆர்வமும், மொழி சார்ந்த உறவுகள் மூலம் தமிழ் மொழியை தக்க வைத்துக் கொள்ளும் தீவிரமும் உள்ள சராசரி தமிழ் வாசகர்கள் பெரும்பான்மையான முதல் பிரிவினர். தமிழகச் சிற்றிதழ்களின் தொடர்பும், தீவிர இலக்கிய வாசிப்பும், சதா படைப்புகளின் மேல் விமர்சனப்பார்வை வீசும் மனபோக்கும் உள்ள சிறுபான்மையினரான இரண்டாம் பிரிவினர்.இந்த இரட்டைக் குதிரையில்தான் பயணம் செய்கிறது மலேசியத் தமிழ் இலக்கியம்.

நானறிந்தவரை, மலேசியத்தமிழ் வாசகர் வட்டங்கள் மலேசியா முழுவதும் பரவிக் கிடக்கின்றன.அவற்றுக்கு தன்னலமற்ற, ஆளுமைமிக்க தலைவர்கள் இருக்கிறார்கள். தீவிர இலக்கியம், நவீனத்துவம், பின் நவீனத்துவம் பற்றியெல்லாம் அவர்களுக்குக் கவலை இல்லை. தமிழைப் பற்றி மட்டுமே கவலைப் படுகிறார்கள். தமிழ் தொடர்ந்து புழக்கத்தில் இருப்பதை பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் உறுதி செய்வது ஒன்றே அவர்களின் நோக்கமாக இருக்கிறது. நாடு தழுவிய கட்டமைப்பு அவர்களுக்கென்று இல்லாவிடாலும், மலேசியா முழுவதும் இருக்கிற வாசகர் வட்டங்கள் புரிந்துணர்வும், இணக்கமான செயல்பாடும் இருக்கிறது. வாசகர் வட்ட நிகழ்வுகள் எங்கு நிகழ்ந்தாலும் நாடு முழுவதும் உள்ள வாசகர் வட்டப் பொறுப்பாளர்கள் தங்கள் குழுவினரோடு காரை எடுத்துக் கொண்டு, டோலில் காசு கட்டி, தேசிய நெடுஞ்சாலையில் 100 கிலோ மீட்டர் வேகத்தில் பயணித்துப் போய் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள். நிகழ்ச்சியை நடத்தும் வாசகர் வட்ட பொறுப்பாளர்கள், அப்படி வரும் வெளியூர் வாசகர்களுக்கு வீட்டில் விருந்து சமைத்துப் போடுவதும் உண்டு. இந்த வாசகர் வட்ட நிகழ்ச்சிகள் ஆட்டம், பாட்டம், இலக்கிய உரைகள், புதிர் விளையாட்டுகள் என்று ஒரு திருவிழாவாகவே கலை கட்டுகின்றன. வேறுபட்ட ஆர்வங்கள் உள்ள பெரியவர்கள், குழந்தைகள் என எல்லோரையும் திருப்திபடுத்தும் அக்கறையை பெரும்பாலான நிகழ்ச்சி பொறுப்பாளர்களிடம் பார்க்க முடிகிறது. இப்படிப் பட்ட மாதாந்திர வாசகர் வட்ட விழாக்களை துவக்கி வைத்தவர் சூரியன் என்ற மாத இதழின் ஆசிரியர் ராமதாஸ் மனோகரன் என்று நினைக்கிறேன். வாசகர்களுடன் நேரடி தொடர்பு என்ற அவரது அணுகுமுறையை பின்னாளில் 'மன்னன்' மாத இதழ் ஆசிரியர் எஸ்.பி.அருணும், 'தென்றல்' வார இதழ் ஆசிரியர் வித்யாசாகரும் பின்பற்றினார்கள் ; இப்போதும் பின்பற்றி வருகிறார்கள்.

கிள்ளான் பாலகோபாலன் நம்பியார், பூச்சோங் எம்.கே. சுந்தரம், ஜோசப் செபாஸ்டியன் போன்ற பல குறிப்பிடத்தக்க வாசகர் வட்டப் பொறுப்பாளர்கள் பல ஆண்டுகள் தொடர்ந்து இயங்கி வருவார்கள். சிரம்பான் பகுதியிலிருந்து இயங்கி வரும் விகடகவியும் குறிப்பிடப்பட வேண்டியவர். இது புனைப் பெயர்தான். இதற்கு முன்பு அவரது புனைப்பெயர் உலகமகா துரோகி. அந்தப் புனைப் பெயரைப் பார்த்ததும் கோபப்பட்ட முன்னாள் மலேசிய நண்பன் ஆசிரியர் திரு.ஆதிகுமணன், 'முதலில் நீங்கள் இந்தப் பெயரை மாற்றுங்கள், அதற்குப் பிறகு உங்கள் படைப்புகளை

வெளியிடுகிறேன்.' என்று சொல்லி விட்டாராம். மறுவாரமே, பெயரை 'அகில உலக மகா துரோகி' என்று மாற்றிக் கொண்டு படைப்பை அனுப்பினாராம் விகடகவி. அதே போல் அவரது எழுத்துப் பிழைகளும் பத்திரிக்கை ஆசிரியர்கள் மத்தியில் பிரபலம். வாவ்! என்று எழுத வேண்டிய இடங்களில் எல்லாம் 'வவ்! வவ்!!' என்று எழுதி அனுப்பி மலேசியத் தமிழ் பத்திரிக்கை ஆசிரியர்களை அலர வைப்பது அவரது வழக்கம். ஆனால், அவரது அன்பான பேச்சும் அணுகுமுறையும் வாசகர்கள் மத்தியில் பிரபலம். கடந்த சில வருடங்களாக 'தென்றல்' இதழ் அலுவலகத்தில் 'விருட்சமாலை' என்ற பெயரில் கவிதைப் பகிர்வு நடந்து வருகிறது. சை.பீர்முகம்மது போன்ற மூத்த எழுத்தாளர்களும் இதில் கலந்து கொண்டு வாசகர்களை கவிஞர்கள் என்ற நிலைக்கு உயர்த்துவதில் அக்கறை காட்டி வருகிறார்கள்.

தீவிர இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்வதில் பல ஆண்டுகளாக கெடா மாநிலமே முன் நிற்கிறது. மறைந்த எம்.ஏ.இளஞ்செல்வன், பேராசிரியர் ரெ.கார்த்திகேசு, புண்ணியவான், சீ.முத்துசாமி, கோ.முனியாண்டி, மனஹரன் போன்றவர்கள் நவீன இலக்கியப் போக்குகளைத் தொடர்ந்து கவனித்து வருவதோடு, அவற்றுக்கு மேலும் ஒரு படி மலேசியத் தமிழ் இலக்கியம் மேம்பட வேண்டுமென்ற மனப்பூர்வமான ஈடுபாடு காட்டியுள்ளார்கள். அவர்களின் அடியொற்றி நம்பிக்கையளிக்கும் புதிய தலைமுறையும் உருவாகி உள்ளது. ஜாசின் தேவராஜன், கே.பாலமுருகன், மஹாத்மன், பா.அ.சிவம், மணிமொழி, ம.நவீன், யுவராஜன், தோழி உட்பட மிக நீண்டதோர் இளையதலைமுறை அது. டாக்டர் மா.சண்முகசிவா அவர்களின் பின்நிற்கும் ஊக்க சக்தியாக இருக்கிறார். அவரது 'கூத்தனின் வருகை சிறுகதையை இன்னும் 50 வருடங்களுக்காவது ஞாபகம் வைத்திருப்பேன். அவ்வளவு அற்புதமான கதை. இளைஞர்கள் சேர்ந்து இழுத்துக் கொண்டிருக்கும் 'வல்லினம்' என்ற காலாண்டிதழ் இன்றைய மலேசிய இலக்கியச் சூழலில் முக்கிய பங்காற்றி வருகிறது. கே.பாலமுருகனின் முயற்சியில் வரத் துவங்கியுள்ள 'அநங்கம்' இதழ் அளிப்பதும் நம்பிக்கையே. ஆக மொத்தத்தில், சராசரி வாசகர்கள், தீவிர வாசகர்கள் என்ற இரட்டைக் குதிரையில்தான் மலேசியத்தமிழ் இலக்கியம் பயணம் செய்கிறது.இதில் எவருடைய பங்கும் எவருக்கும் குறைந்ததில்லை. இதை எல்லோரும் உணர்ந்திருப்பதால், மலேசிய வாசகர்கள் மத்தியில் இருப்பது நம்புக்கையும், நட்புறவும்!

02] **இலக்கிய வரலாறு - தற்காலம்**
https://www.youtube.com/watch?v=g1goqqlThvs [57:10]

03] **தற்கால தமிழ் இலக்கிய வரலாறு**
https://www.youtube.com/watch?v=IHKzOZc7_uU [17:52]

04] Tharkalam **தற்கால இலக்கியம்**
https://www.youtube.com/watch?v=rxVMMHMfLh4 [15:51]

05] **சங்க காலம் முதல் இக்காலம்**
https://www.youtube.com/watch?v=OXu0tUAiXdc [2:10:20]

06] **திருக்குர்ஆனில் இலக்கிய நயம்**
https://www.onlinepj.in/index.php/education/8_thirukkuranil [58:16]

07] **தொல்லியல் கண்டுபிடிப்புகள்**
https://www.youtube.com/watch?v=4C_FOsrtfYc [1:25:13]

08] **வலம்புரி ஜான் பேச்சு | தற்காலத்தமிழ்**
https://www.youtube.com/watch?v=B__PF1mJqmU [1:02:30]

09] **தற்கால தமிழ் இலக்கிய வரலாறு**
https://www.youtube.com/watch?v=IHKzOZc7_uU [17:52]

இரா தண்டாயுதம்
மலாயாப் பல்கலைக்கழகம்

[டாக்டர் இரா. தண்டாயுதம் – தமிழ்ப் பேரவையின் சிறப்புப் பதிவு]

15 ஜூன் 1938 தமிழ் நாட்டில் பிறந்த டாக்டர் இரா.தண்டாயுதம் 1970 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் மு.வ அவர்களின் கீழ் ஆய்வு மாணவராக இருந்து தனது முனைவர் பட்டத்தைப் பெற்றார். 1970 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24 ஆம் நாள் மலேசியாவில் காலடி வைத்த டாக்டர் இரா.தண்டாயுதம், மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையில் விரிவுரையாளராகத் தனது பணியைத் தொடங்கினார். மலேசியத் தமிழ் எழுத்தாளனோடு எழுத்தாளனாகவும், பொது இயக்கங்களின் வழிக்காட்டியாகவும், தமிழ் இலக்கிய வளர்ச்சியின் தூண்டுகோலாகவும், சமய வளர்ச்சியின் ஏர்முனையாகவும், இலக்கண வரம்பை வற்புறுத்துவதில் கண்டிப்பாகவும் சுமார் 16 ஆண்டுக்காலம் மலேசியத் தமிழர்களுக்காகப் பணியாற்றியவர்.சுருங்கச் சொன்னால் டாக்டர் இரா. தண்டாயுதத்தின் பெயரும் பணிகளும் இன்றி, 1970களுக்குப் பின் மலேசியாவில் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுத முடியாது எனலாம். அந்த அளவுக்கு அவர் தம் எழுத்தின் மூலமாகவும் பேச்சின் வாயிலாகவும் இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள்ளார். ‘நான் அரசியலமைப்பால் தமிழகத்துத் தமிழன் ; உணர்வால் மலேசியத் தமிழன்” என்று தன் வாழ்நாள் தாரக மந்திரமாக உச்சரித்து மலேசியத் தமிழ் உலகில் பவணி வந்த டாக்டர் இரா. தண்டாயுதம் 30.11.1986 அன்று தனது பணியினை முடித்துக் கொண்டு தமிழகத்திற்குச் சென்று சிறிது காலம் கழித்து இயற்கை எய்தினார். அன்னாரின் சேவையைக் காலத்தோடு நினைவுக்கூறும் வகையில் மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக டாக்டர் இரா.தண்டாயுதம் அவர்களின் பெயரில் சுழற்கிண்ணம் அறிவித்து சொற்போர் போட்டியினை நடத்தி வருவதில் பெருமை அடைகிறது. டாக்டர் இரா. தண்டாயுதத்தின் வழிக்காட்டுதலில் பல இலக்கியவாதிகள் இந்நாட்டில் உருவானது போல் இச்சுழற்கிண்ணப் போட்டியின் வாயிலாகப் பல பேச்சாளர்கள் உருவானதோடு மலேசிய நாட்டின் பழமை வாய்ந்த தமிழ்ச் சொற்போர் போட்டியாகவும் திகழ்கிறது. தமிழ்ப் பேரவை ஏற்று நடத்தும் இப்போட்டியில் ஒரு பகுதியாக டாக்டர் இரா. தண்டாயுதம் அவர்களை நினைவுக்கூறுவதில் பெருமைக்கொள்கிறது மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை.

‘தமிழோடு உயர்வோம்”

முனைவர் இரா தண்டாயுதம்

23ஆவது சுழற்கிண்ணச் சொற்போர் போட்டியின் பதிவு ஆரம்பம்!

https://thinathanthi.my/?p=20465



நீங்கள் ஆவலுடன் எதிர்ப்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை ஏற்று நடத்தும் முனைவர் இரா தண்டாயுதம் 23ஆவது சுழற்கிண்ணச் சொற்போர் போட்டிக்கானப் பதிவு இன்று முதல் தொடங்கவுள்ளது. இப்பொழுதே, பாரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் வெற்றி பாதையின் முதலடியை எடுத்து வையுங்கள். இந்நாட்டின் வரலாற்று புகழ் மிக்க தமிழ்ச் சொற்போர் போட்டியில் உங்கள் பெயரைப் பதித்து செல்லும் வாய்ப்பை நழுவவிடாதிர்கள். உங்கள் திறமையை வெளிக்கொணர விரைந்து வாருங்கள்.

நிகழ்வின் விவரங்கள்
திகதி : 23 நவம்பர் 2024 (சனிக்கிழமை)
நேரம் : 8am – 6pm
இடம் : மலாயாப் பல்கலைக்கழகம்

தற்காலத் தமிழ் இலக்கியம் தேவை புதிய பார்வை!

https://amudhavan.blogspot.com/2010/12/%E0%AE%A4%E0%AE%B1%E0%AE%95%E0%AE%B2%E0%AE%A4-%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%B4-%E0%AE%87%E0%AE%B2%E0%AE%95%E0%AE%95%E0%AE%AF%E0%AE%AE-%E0%AE%A4%E0%AE%B5-%E0%AE%AA%E0%AE%A4%E0%AE%AF-%E0%AE%AA%E0%AE%B0%E0%AE%B5.html

தமிழுக்கு நிறைய செய்து வருவதாக கலைஞர் சொல்லிவருகிறார். இலங்கைப் பிரச்சினையில் காங்கிரஸின் போக்கிற்குத் தம்மை ஒடுக்கிக் கொண்டுவிட்டார் என்பதைத் தவிர தமிழுக்கு அவர் ஆற்றியிருக்கும் தொண்டுகள் எந்த ஆட்சியாளரும் செய்யாதவை என்பதை மறுப்பதற்கில்லை. வள்ளுவர் கோட்டம், பூம்புகார் கலைக்கூடம், கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை, பெங்களூரில் வள்ளுவர் சிலை திறப்பிற்கான முயற்சி, தமிழுக்குச் செம்மொழி அங்கீகாரம், செம்மொழி உலகத்தமிழ் மாநாடு, தஞ்சைக் கோவிலின் ஆயிரமாவது விழா, அண்ணா நூற்றாண்டு நூலகம் என்று என்றென்றைக்கும் நிலைத்து நிற்கின்ற அணிகலன்கள் தமிழன்னைக்குக் கலைஞரால் அணிவிக்கப்பட்டுள்ளன

ஆனால் –

இது ஒரு பெரிய 'ஆனால்' -

இவை அனைத்துமே – நூலகம் ஒன்றைத் தவிர – தமிழனது பழம்பெருமைகளைப் பேசும் முயற்சிகளுக்கான அடையாளங்கள்தாமே தவிர இந்த நூற்றாண்டின் - இனிவரப்போகும் நூற்றாண்டுகளுக்கான தமிழை அடையாளப்படுத்தும் , பிரதிநிதித்துவப் படுத்தும் சான்றுகளோ அடையாளங்களோ அல்ல .

கொஞ்சம் விரிவாகவே பார்ப்போம்.

தமிழுக்குச் செந்தமிழ்த் தகுதியை அதிகாரபூர்வமாகப் பெறுவதற்கு நூறு ஆண்டுகள் போராட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் கன்னடமும் தெலுங்கும் ஒரேயொரு 'சாதாரணக் கடிதம்' மூலம் செம்மொழித் தகுதியைப் பெற்றுவிட்ட காட்சியையும் நாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். காரணம், இந்த நாட்டின் அரசியல்.

அரசியல்தான் இங்கே அனைத்தையும் தீர்மானிக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரை ஒரு மாதிரியான அரசியல்.......தமிழகத்தைப் பொறுத்தவரை வேறு மாதிரியான அரசியல். இந்த அரசியல் மொழி விவகாரங்களிலும் ஊடுருவி கோலோச்சுவதுதான் இங்கே காலம் காலமாக நடைபெற்று வருகிறது.

இலக்கியங்கள் எல்லாமே இங்கு இரண்டுவிதமாகப் பிரிக்கப்படுகின்றன. ஒன்று – திராவிட இலக்கியம், மற்றொன்று திராவிட வட்டத்துக்குள் வராத இலக்கியம்.

தமிழுக்கு ஆக்கம் புரிகிறோம் என்ற பெயரில் அரசும் சரி ; அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் , தமிழ் வளர்ச்சி நிறுவனங்கள் , தமிழ்ச்சங்கங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளும் சரி , இன்னொரு பெரிய தவறையும் செய்துவருகின்றன.

தமிழை வளர்ப்பதற்கு இவர்கள் எல்லாரும் எடுத்துக்கொண்டிருக்கும் – அல்லது செயல்பட்டுக்கொண்டிருக்கும் தளம் எது தெரியுமா?

சங்க இலக்கியங்கள் மற்றும் அவை தொடர்பான பாடங்களையும் பகுதிகளையும் எடுத்துவைத்துக்கொண்டு இவர்கள் பாட்டுக்குப் புகழ்ந்து கொண்டிருப்பது மட்டும்தான். இது பற்றிய ஆய்வுகள் , இது பற்றிய நூல்கள், இது பற்றிய கருத்தரங்குகள் , இது பற்றிய கலந்தாய்வுகள் , இது பற்றிய இலக்கியக் கூட்டங்கள் – இவைதாம். திரும்பத் திரும்ப இவை மட்டுமேதாம். இவற்றைக்கூட நமக்குள் பழம்பெருமைப் பேசும் நடவடிக்கைகளைத்தாம் செய்கிறார்களே தவிர இவற்றை மற்ற மொழிகளுக்கோ , உலகுக்கோ , குறைந்த பட்சம் ஆங்கிலம் மூலம் அனைத்துத் தரப்பினர்க்கோ கொண்டு சென்று சேர்க்கும் எவ்விதமான முயற்சிகளும் செய்யப்படுவதாகத் தகவல் இல்லை.

இவை ஒருபுறமிருக்க ,தொல்காப்பியத்தில்ஆரம்பித்துபுறநானூறு,அகநானூறு,சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பதிற்றுப்பத்து, பன்னிருதிருமுறை, நளவெண்பா, முத்தொள்ளாயிரம் ,என்று வருவார்கள். இன்னும் கொஞ்சம் 'தம்' பிடித்து பாரதியாரைத் தொடுவார்கள். அங்கேயே ஆணி அடித்தாற்போல் நின்றுவிடுவார்கள் – இலக்கிய வாதிகளில் இவர்கள் ஒருவகை.

இன்னொருவகையினரோ தமிழரின் பெருமை, சங்க இலக்கியம், திருக்குறள் என்று ஆரம்பிப்பார்கள். கம்பராமாயணத்தையும் பக்தி இலக்கியத்தையும் கண்டுகொள்ளாமல் மிக கவனமாக பாரதியாரையும் தவிர்த்துவிட்டு பாரதிதாசனை மட்டும் தூக்கிப்பிடிப்பார்கள். தமிழுணர்வு பாடிய பாரதிதாசனின் ஒரு

பத்துப்பாடல்களை மனப்பாடமாகச் சொல்லிவிட்டு பாரதிதாசனிலிருந்து ஒரேயொரு அங்குலம்கூடக் கீழே இறங்கிவர மாட்டார்கள். இவர்களைப் பொறுத்தவரை தமிழ் இலக்கியம் என்பது பாரதிதாசனுடன் நின்றுவிடுகிறது. பாரதிதாசனுக்குப் பிறகு தமிழுக்கு இலக்கியம் இல்லை; இல்லவே இல்லை!

இந்த இரண்டாவது கண்ணோட்டம்தான் திராவிட அரசுகளுக்கும் அவர்களைச் சார்ந்திருக்கும் இலக்கிய நிறுவனங்களுக்கும் இருந்துவருகிறது. இருபது இருபத்தோறாம் நூற்றாண்டைப் பற்றியோ தற்காலத்தமிழுலகம் பற்றியோ இவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அல்லது-

தொல்காப்பியம் தொடங்கி பாரதிதாசனோடு தமிழின் இலக்கிய வளர்ச்சியை நிறுத்திவிடலாம் என்று இவர்களே முடிவு செய்துவிட்டார்களா என்பதும் தெரியவில்லை.

தமிழ் படித்த மக்கள் என்னவோ தெளிவாகத்தான் இருக்கிறார்கள். பாடப்புத்தகங்களை விட்டு வெளியே வந்துதான் தமிழைத் தேடுகிறார்கள். இல்லாவிட்டால், இத்தனை வார, மாத, நாளிதழ்களும் இலட்சக்கணக்கான நூல்களும் தமிழுக்குக் கிடைத்திருக்குமா என்ன? இத்தனை நாவல்களும், சிறுகதைகளும், கவிதைகளும் கட்டுரைகளும் தமிழில் இருக்குமா என்ன...?

தமிழை - தமிழ் இலக்கியத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லவேண்டிய முயற்சிகளை விட்டுவிட்டு வெறும் பழைய இலக்கியங்களை மட்டுமா எல்லாக் காலத்துக்கும் பரிமாறிக்கொண்டிருப்பது? "சங்க இலக்கியத்தில் என்ன இல்லை?" என்பார்கள்.

உலகம் புதிது; ஒவ்வொரு நாளும் புதிது ; தினசரி தன்னைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கிறது இந்தப் பூவுலகம். 'இன்று புதிதாய்ப் பிறந்தோம் ' என்று மனிதர்களைச் சொல்வதும் அதற்காகத்தான். எல்லாமே புதியதாய் வந்துகொண்டிருக்கும் சூழலில் தமிழில் மட்டும் வெறும் பழையதுதான் என்று சொல்லிக்கொண்டிருப்பது எந்தளவு புத்திசாலித்தனம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

கன்னடத்திற்காக நடைபெறும் மாநாடுகளிலும் சரி; சாதாரணக் கருத்தரங்குகள் மற்றும் புத்தகக் கண்காட்சிகளிலும் சரி, வரிசையாகப் புகைப்படங்கள் வைக்கப்பட்டிருக்கும். அவ்வளவு பேரும் படைப்பாளிகள்...! அதுவும் 'இன்றைய' படைப்பாளிகள். இன்றைய படைப்பாளிகளையும் முந்தைய படைப்பாளிகளையும் சேர்த்துத்தான் எல்லா மொழிகளும் கொண்டாகின்றன – தமிழைத் தவிர!

மலையாளத்தில், கன்னடத்தில், தெலுங்கில், வங்காளத்தில் இந்த நிலைமைதான் இருக்கிறது. தமிழில் அரசியல்வாதிகளுக்கும் நடிகர்களுக்கும் தரப்படும் மரியாதையில் கால்தூசு அளவுக்குக்கூட 'இன்றைய' படைப்பாளிகளுக்குத் தரப்படுவதில்லை.

1)ஒரு அரசியல்வாதி இங்கே புகழுடன் விளங்க வேண்டுமென்றால் அவனுடன் சினிமாவும் இலக்கியமும் கலந்திருக்க வேண்டியுள்ளது.

2)ஒரு சினிமாக்காரன் இங்கே புகழுடன் இருக்க வேண்டுமென்றால் அவனுடன் அரசியல் கலந்திருக்க வேண்டியுள்ளது.

3)ஒரு இலக்கியவாதி புகழுடன் இருக்க வேண்டுமென்றால் அவனுடன் அரசியல் சினிமா இரண்டும் கலந்திருக்க வேண்டியுள்ளது.

தமிழை ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்தந்தக் காலக் கட்டத்தில் தோன்றிய படைப்பாளிகள்தாம் வாழவைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த இருபதாம் நூற்றாண்டில் பாரதிக்குப் பிறகு தமிழைப் பள்ளி கல்லூரிகளைத் தாண்டி வீட்டுக்குள்ளே கொண்டுசென்று வாழவைத்தவர்கள் யார்?

கல்கியும் அகிலனும் புதுமைப்பித்தனும் அல்லவா?

செம்மொழி மாநாட்டில் அந்திகீரனார்,பரணர், பெருந்தலைச்சாத்தனார் பெயரில் அரங்கங்கள் அமைத்தபோது,

கல்கி, அகிலன், ஜெயகாந்தன், கண்ணதாசன் பெயர்களில் அரங்கங்கள் வேண்டாமா ?

செம்மொழி மாநாட்டில் தற்காலத் தமிழ் இலக்கியத்திற்கு வழங்கப்பட்ட இடம் என்ன? சங்க இலக்கியம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள்-73, மொழியியல்- 51, இலக்கணம்- 46, ஒப்பிலக்கியம்-39, ஆவணப்படம்-1, என்ற வரிசையில் தற்காலத் தமிழ் இலக்கியம் பற்றிப் படிக்கப்பட்ட கட்டுரைகள் வெறும் மூன்று . மூன்று மட்டுமே!..விளங்குமா படைப்பிலக்கியம்..?

அண்ணா பற்றி நான்கைந்து கட்டுரைகள்; கலைஞரின் படைப்பிலக்கியம் பற்றி பதினைந்திற்கும் மேற்பட்ட கட்டுரைகள்; கனிமொழி படைப்புக்கள் பற்றி மூன்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள்; அகிலன் கல்கி ஜெயகாந்தன், புதுமைப்பித்தன், கண்ணதாசன் பற்றியெல்லாம் மருந்துக்குக்கூட ஒரேயொரு கட்டுரைக்கூட இல்லையே...!

இவர்களையெல்லாம் படைப்பிலக்கியவாதிகளாகவே ஒப்புக்கொள்ளவில்லையா அல்லது தற்காலப் படைப்பிலக்கியம் பற்றிய சிந்தனேயே அரசுக்கு இல்லையா?
வேறொரு கோணமும் இருக்கிறது. வங்காள மொழிக்கு கலையின் அடையாளமாய் அவர்கள் உலகிற்குக் காட்டுவது சத்யஜித்ரேயை ! கன்னடத்தில் கலையின் அடையாளமாகக்கூட இல்லை, கர்நாடகத்தின் அடையாளமாகவே அவர்கள் காட்டுவது நடிகர் ராஜ்குமாரை ! ஆனால் உலகப்பெரு நடிகர்களுள் ஒருவராக நாம் கொண்டாடவேண்டிய நடிகர் திலகத்தை நாம் நமது கலையின் அடையாளமாகவேனும் சொல்கிறோமா? நேற்று மரித்த நடிகர் விஷ்ணுவர்த்தனுக்கெல்லாம் சிலையும் நினைவு மண்டபமும் அமைத்து உத்தரவிடுகிறது கர்நாடக அரசு. இங்கே என்ன நடக்கிறது? சிவாஜியை 'ஆருயிர் நண்பர்' என்று கூட்டங்களில் உருகுவதுடன் நிறுத்திக்கொள்கிறார் கலைஞர்.

'செந்தமிழ்த் தேன்மொழியாள்' என்று புறப்பட்டுத் தென்றலாய் கோடிக்கணக்கான தமிழர்களின் காதுகளுக்குள் நுழைந்து உணர்வாய் உதிரமாய்ப் படிந்து போனவர் கவியரசர் கண்ணதாசன். கண்ணதாசனையும் 'ஆருயிர் நண்பர்' லிஸ்டில்

சேர்த்துவிட்டு கண்ணதாசனுக்குத் தரவேண்டிய எந்தவித அங்கீகாரத்தையும் கொடுக்காமல்தானே இருக்கிறார் கலைஞர்...! கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக ஆங்கிலமும் விஞ்ஞானமும் படித்த இளைய தலைமுறையைத் தன்னுடைய தமிழைப் படிக்கும் அடிமைகளாக மாற்றி வைத்திருந்தாரே சுஜாதா, அந்த வித்தக எழுத்தாளருக்கு அரசு தந்திருக்கும் அங்கீகாரம் என்ன?

தமிழ் என்றால் தொல்காப்பியத்தில் தொடங்கி திருக்குறள், சங்க இலக்கியம், சிலப்பதிகாரத்துக்கு வந்து அண்ணா, கலைஞர், பாரதிதாசனோடு முடிந்துவிடுகிறது என்று இலக்கியக்கூட்டங்கள் நிகழ்த்துவதும், இலக்கிய மலர்கள் தயாரிப்பதுவும், கருத்தரங்குகள், கலந்தாய்வுகள் நிகழ்த்துவதும் இந்தக் கோணத்திலேயே இலக்கியச் சேவையை முடித்துக்கொள்வதுவும் முறையான தற்கால இலக்கியத்தைப் பற்றிய புரிதலே இன்றி நடந்துகொள்வதுவும்தான் அரசின் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் பணியாகவும் இருந்து வருகிறது.

தற்கால இலக்கியத்தைப் புறக்கணிக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல் தற்கால இலக்கியப் படைப்பாளர்களையும் கண்டுகொள்ளாமல் புறக்கணிப்பதும் இந்த நூற்றாண்டு படைப்பாளர்களுக்கு எந்த அங்கீகாரமும் கொடுக்காமல் விடுவதும் ஒரு மொழியைப் பாதுகாப்பதாகவோ வளர்ப்பதாகவோ ஆகாது.

இத்தகு மோசமான நிலைமைக்கு சில இலக்கிய நாட்டாண்மைகள் சொல்லும் பதில் என்னவென்றால் மற்ற மொழியினருக்கு பழமையான இலக்கியங்கள் கிடையாது. அதனால் அவர்கள் தற்கால படைப்புக்களைத் தூக்கிவைத்துக்கொண்டு பெருமையடைகிறார்கள். ஆனால் நமக்கு சங்க கால இலக்கியங்கள் இருக்கின்றன. அதனால் நாம் பழம்பெருமைப் பேசிக்கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். இது ஒரு கவைக்குதவாத சொத்தையான வாதம். உலகம் இந்த வாதங்களை எல்லாம் ஏற்பதில்லை. உங்கள் மொழியில் இந்த வருடம் என்ன படைப்பிலக்கியம் வந்தது..சென்ற வருடம் எது வந்தது என்றுதான் பார்த்து பரிசு தந்து கொண்டாடுகிறதேயல்லாமல் உங்களிடம் நானூறு வருடங்களுக்கு முந்தைய கவிதை இருக்கிறதா, ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நாவல் இருக்கிறதா என்றெல்லாம்

கேட்டு பரிசு தந்து கொண்டாடுவதில்லை. பழைய இலக்கியங்கள் நம்மிடம் உள்ள பூர்விகச் செல்வங்கள். அவற்றை நாம் கொண்டாடுவோம். அதே சமயம் புதிய இலக்கியங்களையும் இலக்கியவாதிகளையும் உயர்த்திப் பிடிக்கவேண்டிய கடமையும் நமக்கு இருக்கிறது.

தங்களின் மொழிகளில் வரும் தற்கால இலக்கியங்களை வெவ்வேறு மொழிகளுக்குக் கொண்டுசென்று அதன் மூலம் இலக்கியத்துக்கான நோபல் பரிசுகளையெல்லாம் ஐரிஷ், ஸ்பானிஷ் போன்ற சின்னச்சின்ன மொழிகளெல்லாம் பெற்று அந்த மொழிகளின் படைப்பாக்கங்கள் உலகிலுள்ள எல்லா மொழிகளுக்கும் பயணித்துக்கொண்டிருக்கும்போது நாம் மட்டும் "எங்கள் மொழியில் எல்லாம் இருக்கிறது. அதனால் எங்கள் இலக்கியம் பாரதிதாசனோடு நின்றுவிடுகிறது. இதற்குமேல் நாங்கள் பயணிப்பதாக இல்லை" என்று அறிவித்துவிடலாமா?

பெரியார், அண்ணா, கலைஞர் பெயரில் ஆயிரக்கணக்கான சிலைகளும்,மணிமண்டபங்களும், நூலகங்களும், நகர்களும், வரவேற்பு வளையங்களும் உள்ளன. இனிமேலாவது இலக்கிய சம்பந்தப்பட்ட இடங்களுக்கும் நிறுவனங்களுக்கும் நூலகங்களுக்கும் விருதுகளுக்கும் கல்கி, புதுமைப்பித்தன், அகிலன், ஜெயகாந்தன், கண்ணதாசன் போன்ற படைப்பிலக்கியவாதிகளின் பெயர்களைச் சூட்டுங்கள். படைப்பிலக்கியவாதிகளை அங்கீகரித்து கௌரவியுங்கள். கர்நாடகத்தில் இதைத்தான் செய்கிறார்கள். தற்கால படைப்பிலக்கியவாதிகளை அங்கீகரிக்கிறார்கள். வெறுமனே அரசியல்வாதிகளின் பெயர்களை சூட்டுவதில்லை. கர்நாடகத்திற்கும் பெங்களூருக்கும் வந்திருப்பவர்கள் நிஜலிங்கப்பா, ஹெக்டே என்ற பெயர்களையும் சிலைகளையும் எங்கேனும் பார்த்திருக்கிறீர்களா? மாபெரும் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் கொண்டாடும் பண்பு இங்கே இருக்கிறது.
அதனால்தான் கன்னடமொழிக்கு ஏழு ஞானபீடம், வங்காள மொழிக்கு ஐந்து ஞானபீடம், மற்ற மொழிகளுக்கு நான்கு ஞானபீடம் தமிழுக்கு மட்டும் இரண்டே இரண்டு என்ற நிலைமை நீடித்து வருகிறது.

சூப்பர் அரசியல் வாதிகளையும் சூப்பர் ஸ்டார் என்ற பெயரில் வெறும் நடிகர்களையும் மட்டுமே கொண்டாடும் மனநிலையிலிருந்து என்றைக்கு நாம் மாறப்போகிறோம் ?

தற்கால தமிழ் இலக்கிய வளர்ச்சியின் மலேசிய இளைஞர்களின் பங்களிப்பு


ஒரு பார்வ

https://www.researchgate.net/publication/363868482_tarkala_tamil_ilakkiya_valarcciyin_maleciya_ilainarkalin_pankalippu_oru_parva

Abstract

ஆய்வுச் சுருக்கம் இந்த ஆய்வுக் கட்டுரையானது, தற்கால தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மலேசிய இளைஞர்களின் பங்களிப்பு பற்றியதாகும். இன்றைய இளம் தலைமுறையினர்கள் இலக்கியத்தின்பால் மிகுந்த ஆர்வத்தைக் கொண்டிருக்கிறார்கள். சிறுகதை, தொடர்கதை, நாவல், கவிதை போன்ற இலக்கியங்களை எழுதுவது மட்டுமல்லாமல் பல இலக்கிய போட்டிகளையும் செய்து கொண்டு வருகிறார்கள். எடுத்துக்காட்டாக, மலாயா பல்கலைக்கழகம், மலேசிய தேசிய பல்கலைக்கழகம், மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம் போன்ற கல்விக்கூடங்களில் இருக்கும் இளைஞர்கள் பல இலக்கிய போட்டிகளையும் நிகழ்ச்சிகளையும் நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமின்றி, மலேசிய எழுத்தாளர் சங்கம், தமிழ் இளைஞர் மணிமன்றம் போன்ற இயங்கங்களிலும் இலக்கியம் சம்மந்தமான பல நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகளை மிக சிறப்பாக நடத்தி வருகிறார்கள். இதன் வழி மலேசிய இளைஞர்கள், தற்கால தமிழ்

இலக்கியம் வளர்ச்சியடைந்து வருவதில் பெறும் பங்களிப்பைக் கொடுக்கிறார்கள் என்பது தெரிகிறது.



20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அச்சு இயந்திரத்தின் வருகை மற்றும் மேற்கத்திய இலக்கிய தாக்கத்தால் தற்கால தமிழ் இலக்கியம் மலர்ந்தது. பாரதியாரின் 'புதுக்கவிதை' மற்றும் வசன கவிதை முயற்சிகளில் தொடங்கி, உ.வே.சா கண்டெடுத்த ஓலைச்சுவடிகள், நாவல், சிறுகதை, மற்றும் நவீன இலக்கியத் திறனாய்வுகள் வழியாக இக்கால இலக்கியம் வளர்ச்சி அடைந்துள்ளது.

தற்கால தமிழ் இலக்கியத்தின் முக்கிய காலகட்டங்கள்

1. மறுமலர்ச்சி காலம் (20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்)

- **சுப்பிரமணிய பாரதி:** தமிழ் இலக்கியத்தில் தேசிய உணர்வு, சமூக சீர்திருத்தம், மற்றும் புதுமையான கவிதைத் வடிவங்களை அறிமுகப்படுத்தியவர்.

- **மறைமல அடிகள்:** தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கி, தூய தமிழ் நடையை வளர்த்தெடுத்தார்.

2. சமூகக் கதைகளும் உரைநடை வளர்ச்சியும்


- **கல்கி, புதுமைப்பித்தன், கு.ப.ரா., மௌனி:** சிறுகதை மற்றும் நாவல் இலக்கியங்களை உலகத் தரத்திற்கு உயர்த்திய முன்னோடிகள். இக்காலகட்டத்தில் தமிழ் உரைநடை வீச்சும், யதார்த்தவாத எழுத்துக்களும் வேரூன்றின.


3. புதுக்கவிதை மற்றும் நவீன இலக்கியம் (1960-களுக்குப் பின்)

- **நா.காமராசன், அப்துல் ரகுமான், வைரமுத்து, மேத்தா:** மரபுக்கவிதையின் பிடியிலிருந்து விடுபட்டு, நவீன சிந்தனைகளையும், குறியீடுகளையும் புதுக்கவிதைகளில் கையாண்டனர்.
- **'கசடதபற', 'நடை', 'எழுத்து' போன்ற சிற்றிதழ்கள்:** நவீன தமிழ் இலக்கியத்தின் போக்கை மாற்றியமைப்பதில் முக்கிய பங்கு வகித்தன.


4. சமகால இலக்கியப் போக்குகள்

- **தலித் இலக்கியம்:** ஒடுக்கப்பட்ட மக்களின் குரலையும், சமூக அநீதிகளையும் மையமாக வைத்து எழுதப்படும் படைப்புகள் (எ.கா: பாமா, பூமணி, சோ.தர்மன்).
- **பெண்ணிய இலக்கியம்:** பெண்களின் சுதந்திரம், உரிமைகள், மற்றும் உளவியல் சார்ந்த எழுத்துக்கள் (எ.கா: சல்மா, குட்டி ரேவதி, வ.கீதா).
- **ஈழத்து இலக்கியம்:** போரின் வலிகளையும், புலம்பெயர் வாழ்வையும் பேசும் படைப்புகள் (எ.கா: செ.யோகநாதன், ஷோபா சக்தி).









நூலின் முழுமையான தகவல்கள்

சங்க இலக்கியம் : எட்டுத்தொகை

உரையாசிரியர் இரா. தண்டாயுதம் (பகுதி-1)

Author / ஆசிரியர் :

: இரா. தண்டாயுதம்

A.Category / ஆ.வகை :

:

Publisher / பதிப்பகம் :

: சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்

Year / ஆண்டு :

: 1978

Page &Size / பக்கம் &அளவு :

: 0,0

Price / விலை :

: Rs.1120.80 for 2 Parts

Subject / நூற்பிரிவு :

: 0

Accession No / அணுகல் எண் :

: 84989

Call No / நூலக நூல் எண் :

: 0

Description / விளக்கம் :

:

@@@@@@@@@@@@

சங்க இலக்கியம் : எட்டுத்தொகை

உரையாசிரியர் இரா. தண்டாயுதம் (பகுதி-2)

Author / ஆசிரியர் :

: இரா. தண்டாயுதம்

A.Category / ஆ.வகை :

:

Publisher / பதிப்பகம் :

: சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்

Year / ஆண்டு :

: 1978

Page &Size / பக்கம் &அளவு :

: 0,0

Price / விலை :

: 0

Subject / நூற்பிரிவு :

: 0

Accession No / அணுகல் எண் :

: 84990

Call No / நூலக நூல் எண் :

: 0

Description / விளக்கம் :


A Study of the Sociological Novels in Tamil


Dr R Dhandhayutham

Publisher: University of Madras

Year: 1977

https://archive.ph/20120803001115/http://www.getcited.org/pub/101949464





A STUDY OF THE SOCIOLOGICAL NOVELS IN TAMIL

BY

DR. R. DHANDAYUDHAM, M.A., Ph.D.,
Lecturer, Department of Indian Studies,
University of Malaya,
Kuala Lumpur.

UNIVERSITY OF MADRAS
1977


CONTENTS

		Page
	ACKNOWLEDGEMENT	
	NOTE ON TRANSLITERATION AND DIACRITICAL MARKS	
	PREFACE	
CHAPTER I.	INTRODUCTION	1
CHAPTER II.	THE THRESHOLD: The Novels of Vedanayagam Pillai	14
CHAPTER III.	THE AGE OF REALISM	48
CHAPTER IV.	THE DECLINE OF THE SOCIOLOGICAL NOVEL: The Age of Detectives: Translations and Adaptations	99
	Some significant Novels and Novelists of the period	166
CHAPTER V.	THE AGE OF KALKI: The Novels of Kalki	146
	The Novels of Devan	176
CHAPTER VI.	CONCLUSION	180
	NOTES	183
	BIBLIOGRAPHY: English	221
	Tamil	233

"A Study of the Sociological Novels in Tamil" refers to the seminal 1977 literary criticism book by academic and author **Dr. R. Dhandayudham**. Published by the University of Madras, this 258-page work offers a comprehensive exploration of how Tamil fiction evolved to capture the complexities of society, human relationships, and cultural shifts.

The book breaks down the thematic and structural elements of sociological literature in Tamil across several core areas:

Key Themes and Structure

- **Social Realism:** The study examines how early Tamil novelists moved away from mere storytelling to provide vivid portraits of character and rich social backgrounds.
- **Evolution of Prose:** It analyzes the transition from ancient verse-based storytelling to prose, which provided writers the necessary width to detail societal operations, traditions, and collective human life.

- **Thematic Breakdown:** Dr. Dhandayudham explores how authors utilized the novel format to address emerging socio-cultural conflicts, power dynamics, and domestic intricacies within Tamil society.

Book Details

- **Author:** Dr. R. Dhandayudham
- **Publisher:** University of Madras (Madras University Tamil Department Series No. 36)
- **Year of Publication:** 1977
- **Format:** Hardcover / Print

For historical and literary researchers, this text remains a vital resource for understanding the roots of social critique in modern Tamil literature. While originally a printed volume, you can track down physical or archival copies to read through catalogs like the Tamil Digital Library or the Roja Muthiah Research Library

மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய **டாக்டர் இரா. தண்டாயுதம்** அவர்களின் நினைவாக மலேசியாவில் தொடங்கப்பட்ட ஓர் இலக்கிய அமைப்பு **டாக்டர் தண்டாயுதம் இலக்கியப் பேரவை** ஆகும்.

வரலாறு மற்றும் சிறப்பம்சங்கள்:

- **நிறுவனர்:** இவர் மலாயாப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். இவரது மறைவுக்குப் பிறகு, இவரது நெருங்கிய நண்பரும் எழுத்தாளருமான *வீ. செல்வராஜ்* என்பவரால் இந்த பேரவை முன்னின்று நடத்தப்பட்டது.
- **இலக்கியப் பணி:** மலேசியத் தமிழ் இலக்கியத்தை வெளிநாட்டுத் தமிழர்களிடையே கொண்டு சேர்க்கும் நோக்கில், 'மலேசியத் தமிழ் இலக்கியம்' எனும் தலைப்பில் சிறுகதைகள், கவிதைகள் மற்றும் குறுநாவல்களை உள்ளடக்கிய தொகுப்புகளை இந்த பேரவை வெளியிட்டுள்ளது.
- **சாகித்திய அகாதமி விருது:** இவர் எழுதிய *'தற்காலத் தமிழ் இலக்கியம்'* (1975) என்ற இலக்கிய விமர்சன நூலுக்காக சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ளார்.
- **மரியாதை:** இவரது நினைவாக, மலாயாப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரவை இவருடைய பெயரில் சுழற்கிண்ணம் வழங்கி


மலேசிய நாட்டின் பழமையான தமிழ்ச் சொற்போர் போட்டிகளை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

மலேசியத் தமிழ் எழுத்துலகம்

நூற்று முப்பது ஆண்டுகளின் வரலாறு

ரெ.கார்த்திகேசு

https://www.vallamai.com/?p=72606



(2006இல் தமிழ் சிஃபி சார்பில் தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ் ஒன்று தயாரித்தேன். அதில் நாடுகள்தோறும் தமிழ் என்ற கருப்பொருளில் கட்டுரைகள் பெற்று வெளியிட்டேன். அதற்கு மலேசியாவில் தமிழ் என்ற கருப்பொருளில் கட்டுரை வேண்டி, ரெ.கா.வை அணுகினேன். மலேசியத் தமிழ் எழுத்துலகம்: நூற்று முப்பது ஆண்டுகளின் வரலாறு என்ற தலைப்பில் அருமையான கட்டுரையினை வழங்கினார். அவரது மறைவுக்கு வல்லமை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது. அவரது நினைவைப் போற்றும் வகையில் அந்தக் கட்டுரையின் முழு வடிவத்தை இங்கே வெளியிடுகிறோம். – அண்ணாகண்ணன்)

தொடக்கம்:

மலேசியத் தமிழ் இலக்கியத்திற்கு ஏறக் குறைய 130 ஆண்டுகள் வரலாறு இருப்பது நமக்கெல்லாம் பெருமை தரும் செய்தி. மலேசியாவில், பினாங்கில் 1876-இல் "தங்கை நேசன்" என்னும் பத்திரிகை அச்சிடப்பட்டு வெளிவந்துள்ள செய்தி மலேசிய இலக்கிய வரலாற்றாசிரியர்களால் குறிக்கப் பட்டுள்ளது. (மா. இராமையா: "மலேசியத் தமிழ் வரலாற்றுக் களஞ்சியம்). சிங்கப்பூரில் 1887-இல் சி.ந. சதாசிவப் பண்டிதரின் "வண்ணையந்தாதி" முதலிய நூல்கள் தொடக்கமாக அமைந்தன (ஏ.ஆர்ஏ. சிவகுமாரன்: "சிங்கப்பூர் மரபுக் கவிதைகள்).

இந்தத் தொடக்கங்களிலிருந்து இந்த இலக்கிய வரலாறு எழுச்சியும் தளர்ச்சியும் கண்டு தொடர்ந்து வளர்ந்திருக்கிறது. அச்சு வசதியும் ஊடக வளர்ச்சியும், அவற்றைப் பெறவும் பெருக்கவும் நிதி வசதியும் உள்ள இந்த நவீன கால கட்டத்தில் வாழும் நாம், இவையெல்லாம் மிக அரிதாக இருந்த ஒரு மங்கிய தொடக்க காலத்தில் உண்மையான தமிழ் மொழி பண்பாட்டு அர்ப்பணிப்பு உணர்வுடன், இந்த இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்ட வித்தகர்களான நம் முன்னோடிகளை மானசீகமாகப் போற்றி வணங்குதல் வேண்டும்.

மலேசியாவில் நவீனத் தமிழ் இலக்கியத்தின் மறுவுயிர்ப்புக் காலமாக 1946-ஐ ஓர் எல்லைக் கோடாகக் காட்டுகிறார் மா. இராமையா. இரண்டாம் உலகப் போரில் ஜப்பானியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் மத்தியில் சிக்கிச் சீரழிந்த மலேசியாவில் அன்றாட வாழ்க்கையின் அவலங்களுக்கிடையில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க இலக்கியங்கள் ஏதும் தோன்றவில்லை. 1946-க்குப் பிந்திய இலக்கிய வரலாறு சி.வீ. குப்புசாமி எழுதிய "ஜப்பானியர் லாக்கப்பில் ஏழு நாட்கள்", "யுத்தத்தால் வந்த யுத்தம்", (இரண்டும் 1946) என்ற நூல்களுடன் தொடங்குவதும் பொருத்தம்.

சி.வீ.குப்புசாமி இவற்றைத் தொடர்ந்து மலேசியத் தமிழ் இலக்கியத்தின் கிரியா ஊக்கியாகவும், எழுத்தாளர் இயக்கங்களின் நடத்துநராகவும் (மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைமைப் பதவி உட்பட) நெடுநாட்கள் இருந்து மறைந்தார்.

கதை வகுப்பு:

1946-க்குப் பிறகு இந்த நாட்டு தமிழ்ப் புத்திலக்கியத் துறையில் இடம்பெற்ற மிக முக்கியமான நிகழ்வு அக்காலத்து முன்னோடி எழுத்தாளர்களாகவும் விமர்சகர்களாகவும் இருந்த சுப. நாராயணனும் பைரோஜி நாராயணனும் "தமிழ் நேசன்" நாளேட்டில் 1950-இல் நடத்திய "கதை வகுப்பு" ஆகும். "இரண்டு நாராயணன்களும் கூடி நடத்திய கதை வகுப்பு கதை எழுதுவோருக்கு மட்டுமின்றி கவிதை, உரைநடை, நாடகம் ஆகியன எழுதுவோருக்கும் தக்க வழிகாட்டியாக அமைந்தது. இந்நாட்டில் எழுத்தாளர்களை உருவாக்க முடியாது என்று சொல்பவர்களுக்கு இ·தோர் சவாலாகவும் அமைந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்." (மா. இராமையா: மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு).

இந்த முயற்சியின் உச்சகட்டமாக 1951-இல் கதை வகுப்பு உறுப்பினர்களுக்கு ஒரு பரிட்சையும் வைத்தார்கள். மொழி, எழுத்து, ரசனை போன்றவற்றைப் பற்றியும், கதை வகுப்பு, மனத்தத்துவம், அரசியல் போன்ற குறிப்பிட்ட தலைப்புக்களைப் பற்றியுமான கேள்வி பதிலாக இது அமைந்திருந்தது. இவற்றில் வெற்றி பெற்றவர்களை மேதை எழுத்தாளார், சிறந்த எழுத்தாளர், தேர்ந்த எழுத்தாளர், நல்ல எழுத்தாளர், ஆர்வ எழுத்தாளர் என்று தரம் பிரித்து அறிவித்தார்கள்.

மேதை எழுத்தாளர்கள் மூவர்: பி.ஏ.கிருஷ்ணதாசன் (தைப்பிங்); அ. இராமநாதன் (சுங்கை சிப்புட்); சி.மாரியப்பன் (காஜாங்).

23 பேர் சிறந்த எழுத்தாளர்கள் என அறிவிக்கப் பட்டனர். அவர்களுள் பின்னாளில் இலக்கிய உலகில் முக்கியமானவர்களாக வளர்ந்த பெ.மு. இளம்வழுதி (குவால சிலாங்கூர்); கா.பெருமாள் (ரிங்லட்); சி. வடிவேல் (லாபு); சி. வேலுசாமி (ரந்தாவ்); எஸ்.எஸ். சர்மா (சிங்கப்பூர்) ஆகியோர் அடங்குவர்.

தேர்ந்த எழுத்தாளர்கள் 17 பேர்கள் பட்டியலில் மா.இராமையா (மூவார்); கு.நா. மீனாட்சி (குவால சிலாங்கூர்) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். நல்ல எழுத்தாளர்கள் 14 பேர்; ஆர்வ எழுத்தாளர்கள 18 பேர்.

எழுத்தாளர் பேரவை:

1952-இல் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் இன்னொரு முயற்சியாக சிங்கப்பூர் “தமிழ் முரசு” எழுத்தாளர் பேரவை என்ற அமைப்பை ஏற்படுத்தியது. இதில் எழுத்தாளர்கள் உறுப்பியம் பெற்றனர். முதலாவதாகப் பேர் பதிந்து கொண்டவர் மா. செ. மாயதேவன். எழுத்தாளர் பேரவையின் விதி முறைகளில் ஒன்று உறுப்பினராகும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு படையலை உருவாக்க வேண்டும் என்பது. மற்றொன்று படைப்பிலக்கியம் எழுதும் எவரும் பேரவையின் வேறு இரண்டு உறுப்பினர்களுக்கு அதனை அனுப்பித் திருத்திய பின்னரே அதனை அச்சில் ஏற்ற வேண்டும் என்பது.

இலக்கிய இதழ்கள்:

46-க்குப் பிந்திய இலக்கிய இதழ்களில் முந்தியது முதலில் கா.இராமநாதனையும் பின்னர் தி.சு.சண்முகத்தையும் ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த “சோலை” திங்களிதழ் ஆகும். 1952 ஜனவரி தொடங்கி எட்டு மாதங்கள் மட்டுமே வெளிவந்திருந்தாலும் முன்னோடி எழுத்தாளர்களான சி.அன்பரசன், கா. அண்ணாமலை, கா. பிச்சைமுத்து, க.ப.சாமி, இராவணேசப் புலவர் (ஈப்போ),

கிருஷ்ணதாசன், மா.செ. மாயதேவன், மா.இராமையா, அ. இராமநாதன் ஆகியோர் இதில் எழுதினர்.

மாணவர் மணிமன்ற மலர்:

1953-இல் "தமிழ் முரசு" நாளிதழ் "மாணவர் மணி மன்ற மலர்" என்ற வார இணைப்பு ஒன்றினைத் தொடங்கி தமிழ்ப் பள்ளி மாணவர்களும் சிறுவர்களும் இலக்கிய அறிமுகம் பெற வழியேற்படுத்திக் கொடுத்தது. பல பின்னாள் எழுத்தாளார்களுக்கு இதுவே பயிற்சிக் களமாகவும் அமைந்தது.

மாணவர் மணிமன்ற மலரில் எழுதி பிற்காலத்தில் எழுத்துலகில் முக்கிய எழுத்தாளர்களாக வளர்ந்தவர்களில் ம. முருகையன் (முல்லை), மு. அப்துல் லத்தீப், சு. அப்துல் முத்தலிப், கு.கிருஷ்ணன், மு. சீனிவாசன், மைதி. அசன்கனி, பழ. அடைக்கலம் (தங்காக் தமிழ்ப் பாணன்), நீ.பெ.கலைச் செல்வன், ரெ.கார்த்திகேசு, செ.சின்னையா, அ.சந்திரசேகரன், சா.ஆ.அன்பானந்தன், ப.மு.அன்வர், கே.எம்.யூசுப், வே.சு.இளந்திரையன், மு.பக்ருதீன், மைதி. சுல்தான், அ.ரெசுவப்பா, வீ.தீனரட்சகி, ப.கு.சண்முகம் ஆகியோர் அடங்குவார்கள்.

அந்தக் காலகட்டத்தில் கவிஞர்களாக இருந்த சோமசன்மா, முரசு. நெடுமாறன், கவி மதிதாசன், சி. வேலுசுவாமி, வளர்மதி முதலானோர் மணி மன்ற மலரில் நிறையக் கவிதைகள் எழுதியுள்ளனர்.

சிறுகதைப் போட்டிகள்:

50-களின் பிற்பகுதியில் "தமிழ் முரசு" நாளிதழ் மலேசிய எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியை நடத்தியது. அப்போது அதன் துணையாசிரியராக இருந்த வை. திருநாவுக்கரசு அவர்களே இந்தப் புதிய முயற்சியை ஊக்குவித்து நடத்தினார். இந்தப் போட்டியில் பிற்காலத்திய பல நல்ல சிறுகதை எழுத்தாளர்கள் தங்களை அடையாளம் காட்டினார்கள்.

ரெ.கார்த்திகேசு, அ.ந.பெ.சாமி, பெ.மு.இளம்வழுதி, சி.அன்பரசன், மா.இராமையா, அ.கி.அறிவானந்தன், மு.கந்தன், கு.நா.மீனாட்சி, சி.வடிவேலு முதலானோர் இதில் பங்கு பற்றிப் பரிசுகள் பெற்றுள்ளனர்.

ரசனை வகுப்பு:

1953-இல் தமிழ் முரசு "ரசனை வகுப்பு" தொடங்கிற்று. "கதை வகுப்பு" நடத்தியவர்களில் ஒருவரான கந்தசாமி வாத்தியாரே ரசனை வகுப்பையும் நடத்தினார். ரசனை வகுப்பு இதழ்களை மட்டுமன்றி வானொலித் தமிழ் நிகழ்ச்சிகளையும் தீவிரமாக விமர்சனம் செய்தது. எதிலும் புரட்சி செய்ய வேண்டும் என்ற தீவிர எண்ணம் கொண்டவரான கந்தசாமி வாத்தியார் "அண்ணா அறிஞரா?" என்ற ஒரு கட்டுரையை எழுதி நீண்ட விவாதத்தையும் தொடக்கி வைத்தார்.

தமிழ் எழுத்தாளர் மாநாடு:

கந்தசாமி வாத்தியார் ஆரம்ப காலத்திலிருந்தே "தமிழ் எழுத்தாளர் மாநாடு" ஒன்றினைக் கூட்டும் ஆசை கொண்டிருந்தார். 29/10/55-இல் இது குவாலா லும்பூரில் தமிழ்க் கலை மன்றத்தினரால் கூட்டப் பட்டது. மாநாட்டுத் திறப்பாளராக மா. இராமையா இருந்தார். காலையில் நடைபெற்றக் கலந்துரையாடலுக்கு கோ.சாரங்கபாணி தலைமை தாங்கினார். பிற்பகலில் சி.வீ. குப்புசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆழி.அருள்தாசன் முதலியோர் அதில் பேசினார்கள். 29 பேரே அந்தக் கூட்டத்தில் பங்கு பற்றினார்கள். அவர்களில் இர.ந.வீரப்பன், எஸ்.வி.சுப்பிரமணியன், அ.மருதப்பன், சி.அன்பரசன், பெ.மு.இளம்வழுதி, சி.வடிவேல், மு.கந்தன், அ.ந.பெ. சாமி, மு.அப்துல் லத்தீப், கு.நா.மீனாட்சி, பழ. மனோகரன், செ.குணசேகர், அ.கதிர்ச் செல்வன், ஆகியோரும் இருந்தனர். கூட்டம் பற்றித் தலையங்கம் எழுதிய "திருமுகம்" இதழின் ஆசிரியர் மா.செ.மாயதேவன், அந்தக் கால

கட்டத்திலேயே மலாயாவில் இருநூற்றுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத் தக்கதாகும்.

மலாயா தமிழ் எழுத்தாளர் சங்க அமைப்பு:

1955-இல் நடந்த இந்தக் கூட்டத்துக்குப் பிறகு தமிழ் எழுத்தாளர்களுக்கான சங்கம் ஒன்று அமைக்கும் எண்ணம் இவர்களிடையே ஓங்கி வந்தது. 5/7/1958-இல் சி.வேலுசாமி அவர்களின் முயற்சியில் மலாயா தமிழ் எழுத்தாளர் சங்க அமைப்புக் கூட்டம் குவால லும்பூர் பங்சார் தமிழ்ப்பள்ளியில் நடந்தது. இக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டோர்: தலைவர் சி.வீ.குப்புசாமி, துணைத்தலைவர் தி.சு.சண்முகம், செயலாளர் சி. வேலுசுவாமி, துணைச் செயலாளர் செ.குணசேகர், பொருளாளர் மு.அப்துல் லத்தீப். 2/2/1959-இல் இதற்குப் பதிவு கிடைத்தது.

இதன் ஆண்டுக் கூட்டத்தில் தமிழ் நேசன் துணையாசிரியர் கனகசுந்தரம் புதிய தலைவராகவும் செ.குணசேகர் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இதன் பிறகு சங்கம் செயலிழந்து அதன் பதிவும் ரத்தாகிற்று.

அதன் பின் மீண்டும் சி.வேலுசுவாமியின் முயற்சியில் ஒரு அமைப்புக் கூட்டம் 1962-இல் கூட்டப்பட்டு பதிவுக்கான மறுமுயற்சிகள் செய்யப்பட்டன. 26/3/1963-இல் சங்கம் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்ற புதிய பெயரில் பதிவு பெற்றது. புதிய சங்கத்தின் நிர்வாகிகள் பின் வருமாறு: தலைவர் முருகு சுப்பிரமணியம்; துணைத்தலைவர் சி.வேலுசுவாமி; செயலாளர் சு.கணபதி; பொருளாளர் கு.ஏழுமலை; செயற்குழுவினர் சி.வீ.குப்புசாமி, இர.ந.வீரப்பன், க.கிருஷ்ணசாமி முதலியோர். இந்தச் சங்கத்தின் தொடர்ச்சியே இன்று பெ. ராஜேந்திரனின் தலைமையில் இயங்கி வருவதாகும்.

தமிழர் திருநாள்:

50-களின் மத்திக்கும் 60-களின் மத்திக்கும் இடைப்பட்ட கால கட்டத்தில்தான் கோ.சாரங்கபாணி தமிழர்களை ஒருமுகப் படுத்தும் முகமாகவும் தமிழ் மொழி பண்பாட்டு எழுச்சியை ஊட்டும் முகமாகவும் தமிழர் திருநாளைத் தொடங்கினார். பல ஆண்டுகள் நாடு முழுவதும் கொண்டாடப்பட்ட தமிழர் திருநாள் இலக்கியப் போட்டிகளையும் விரிவாக நடத்தி இலக்கியத்தை வளர்த்தது.

கு. அழகிரிசாமி:

50-களின் மத்தியில் தமிழ் நாட்டு எழுத்தாளர் கு. அழகிரிசாமி "தமிழ் நேசன்" நாளிதழுக்கு ஆசிரியராக வந்தமர்ந்தார். படைப்பிலக்கியத்தை ஊக்குவிப்பதையும் அவர் ஒரு நோக்கமாகக் கொண்டார். அவரை மையமாகக் கொண்டு குவாலா லும்பூரில் இலக்கிய வட்டம் ஒன்று அமைந்தது. 55-இல் இதனை முன்னின்று அமைத்தவர் கி.மூர்த்தி. மாதம் ஒருமுறை கூடிய இந்த இலக்கிய வட்டத்தில் தலை நகர் தவிர கிள்ளான், செரம்பான், குவால செலாங்கூர் போன்ற இடங்களிலிருந்தும் அன்பர்கள் வந்து கலந்து கொண்டார்கள். முதன் முறையாக சிறுகதையின் உத்தி, நடை, கருத்து, அமைப்பு ஆகியவை பற்றி அறிவு பூர்வமான தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. கு.அ. இலக்கிய வட்டத்தில் வாசிக்கப் பட்ட கதைகளைத் தமிழ் நேசனில் வெளியிட்டும் வந்தார்.

கு.அ.வின் கணிப்பில் சிறந்த எழுத்தாளர்களாகச் சிலர் குறிக்கப் பட்டனர். அவர்களுள் மு.அப்துல் லத்தீப், வி.ச.முத்தையா, மு.இராச இளவழகு, மா.செ.மாயதேவன், மா.இராமையா, சி.வடிவேலு, செ.குணசேகர், சி.வேலுசாமி, பொ.ச.பரிதிதாசன், சி.அன்பரசன், சி.கமலநாதன், நாகு மணாளன், அ.பேச்சிமுத்து, அ.கி.அறிவானந்தன், ந.அநந்தராஜ் ஆகியோர் இருந்தனர். கு.அ. 1957-இல் தமிழ் நாடு திரும்பு முன் இலக்கிய வட்டம் நிறுத்தப் பட்டது.

நூல் வெளியீடு:

1952-இல்தான் புத்திலக்கியப் படைப்பு நூலாக மா.இராமையா, மா.செ. மாயதேவன் இருவரும் இணைந்து எழுதிய சிறுகதைத் தொகுப்பான "இரத்த தானம்" வந்தது. இந்த நூல் குறித்து எழுத்தாளர் பேரவை "பேரவைக்குப் பூரிப்பு; மலாயாத் தமிழ்ப் பெருமக்களுக்கு பெருமை" என எழுதியது.

மலாயா சுதந்திரம் பெற்ற 1957-இலிருந்து இங்கு எழுதப்படும் படைப்பிலக்கியங்கள் பெருகின. பல நூல்களும் வெளியாயின. வார, மாத இதழ்கள் பலவும் தோன்றி படைப்பாளர்களுக்கு உள்ள வாய்ப்புக்களை விரிவாக்கின. மலாயா (பின்னர் மலேசியா) தமிழ் எழுத்தாளர் இயக்கமும் படைப்பிலக்கியத்துக்கு தொடர்ந்து உயிரும் உணர்ச்சியும் ஊட்டி வந்தது.

மணிக்கதைகள்

மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றம் தனது சமுகப் பணிகளுக்கிடையே ஆற்றி வந்த இலக்கியப் பணியின் ஒரு உச்சமாக மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு ஒன்றினைக் கொண்டு வந்தது. 1968-இல் வெளிவந்த "மணிக்கதைகள்" என்னும் தொகுப்பு அக்கால கட்டத்தில் மலேசிய இலக்கியம் அடைந்துள்ள வளர்ச்சியை நன்கு பிரதிபலிப்பதாக அமைந்தது. "தீபம்" நா. பார்த்தசாரதியின் முன்னுரையுடனும், டாக்டர் இராம சுப்பையாவின் அணிந்துரையுடனும், இலங்கை இரசிகமணி கனக. செந்தில்நாதனின் ஆய்வுரையுடனும், மன்றத்தலைவர் க.கிருஷ்ணசாமியின் முகமனுடனும் வெளியான இந்நூலில் சா.ஆ.அன்பானந்தன், க.கிருஷ்ணசாமி, சாமி.மூர்த்தி, ரெ.கார்த்திகேசு, எம்.குமாரன், சை.பீர் முகம்மது, பரிதாமணாளன், பாதாசன், மு.க.மா. முத்தமிழ்ச் செல்வன், சோ.பரஞ்சோதி ஆகியோரின் கதைகள் இடம் பெற்றிருந்தன.

பவுன் பரிசுகள்:

சிறுகதைத் துறைக்கு முருகு சுப்பிரமணியனை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் நேசன்" 1972-இல் தொடங்கிய பவுன் பரிசுத் திட்டம் ஒரு பெரும் புத்துணர்ச்சியைத் தந்தது. இதில் நடுவர்களாக இருந்து கதைகளைத் தேர்ந்தெடுக்க நல்ல இலக்கியவாதிகளையும் முருகு தன்னுடன் துணைக்கு அழைத்துக் கொண்டார். அவர்களுள் டாக்டர் ஆர்.தண்டாயுதம், புலவர் சேதுராமன், எஸ்.ஆர்.எம்.பழனியப்பன், ரெ.கார்த்திகேசு, டாக்டர் பிரமீளா கணேசன் ஆகியோரும் அடங்குவர்.

சி.அன்பானந்தம், அரு.சு.ஜீவானந்தன், இராம வீரசிங்கம், மு.அன்புச்செல்வன், எம்.ஏ.இளஞ்செல்வன், இராம கண்ணபிரான், ஆர்.சண்முகம், இ.தெய்வானை, சாமி மூர்த்தி, சீ.முத்துசாமி, பாவை, சி.வடிவேல், ந.மகேசுவரி, மா. இராமையா ஆகியோர் பவுன் பரிசு பெற்றோர் பட்டியலில் அடங்குவார்கள். முதல் ஆண்டில் பரிசு பெற்றவர்களைக் கூட்டித் தமிழ் நேசன் ஒரு உபசரிப்பு விருந்து நடத்தி அனைவருக்கும் பரிசு வழங்கியதுடன் முதல் பனிரெண்டு கதைகளை "பவுன் பரிசுக் கதைகள்" என்னும் தலைப்பில் ஒரு தொகுப்பாகவும் கொண்டு வந்தது.

இதன் பின்னர் தொடங்கப்பட்ட கவிதைக்கான பவுன் பரிசுப் போட்டியில் வே.மகேந்திரன், கரு வேலுசாமி, ஆதம் குமார், எல்லோன், கன்னல் கவி கரீம், வீரமான், காரைக்கிழார், சோம சன்மா, கரு.திருவரசு, எஸ்.கே. வடிவேலு, சங்கு சண்முகம் முதலியோர் பரிசு பெற்றனர்.

மாதாந்திரச் சிறுகதைக் கருத்தரங்கம்:

தமிழ் நேசன் வழியாக எழுத்தாளர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டிவந்த முருகு, அதே நேரத்தில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் பொறுப்பேற்று சில ஊக்குவிப்புத் திட்டங்களைச் செயல் படுத்தி வந்தார். அவற்றுள் முக்கியமானது சிறுகதைக்கான மாதாந்திரக் கருத்தரங்கங்களைக் கூட்டி ஒவ்வொரு

மாதத்திற்கும் சிறந்த ஒரு கதைக்கு 50 ரிங்கிட் பரிசு வழங்கி வந்ததாகும்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் முதல் தொகுதி 1974-இல் "பரிசு" என்னும் தலைப்பில் வெளியானது. 14 கதைகள் இதில் இடம்பெற்றன. இவற்றை எழுதிய எழுத்தாளர்கள்: மீனா நடராஜா, ரெ.கார்த்திகேசு, ஆ.சாரதா, சாமி மூர்த்தி, சுமதி தங்கராஜ், த.ப.இலட்சுமணன், சக்கரவர்த்தி சுப்பிரமணியன், ஐ.இளவழகு, சி.வடிவேல், மா.சுப்பிரமணியம், மா.இராமையா, இரா.ச. இளமுருகு, துளசி, நாடோடி.

ஒரு சில ஆண்டுகள் விடுபட்டிருந்த மாதாந்திரத் தங்கப் பதக்க விருதளிப்பு ஆதி குமணன் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்குத் தலைவராக வந்த பிறகு உயிர்ப்பிக்கப் பட்டுத் தொடர்ந்து இன்றும் நடை பெற்று வருகிறது. இதனை அடியொற்றி கவிதைக்கும் இப்போது காலவாரியாகக் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

பேரவைக் கதைகள்:

1970-களில் இரா.தண்டாயுதம் மலாயாப் பல்கலைக் கழக இந்திய இயல் துறையில் புத்திலக்கிய விரிவுரையாளராக வந்து சேர்ந்தார். மலேசியப் படைப்பிலக்கியத்துக்கு அவர் ஆற்றிய சேவைகள் அதிகம். அவருடைய ஆலோசனையின் கீழ் மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவையின் முயற்சியில் தொடங்கப்பட்ட ஆண்டுச் சிறுகதைப் போட்டி இந்த நாட்டின் சிறுகதை வரலாற்றில் ஒரு மைல்கல்லாக ஆகியுள்ளது. 1986 முதல் இதில் பரிசு பெற்ற கதைகள் நூல் உருவில் வந்து கொண்டுள்ளன.

மலேசியத் தமிழ் இலக்கியம்:

இரா. தண்டாயுதம் பதவிக் காலம் முடிந்து தமிழகம் திரும்பி அங்கே அகால மரணமடைந்த பிறகு அவருடைய நினைவாக "டாக்டர் தண்டாயுதம் நினைவிலக்கியப் பேரவை" தொடங்கப் பட்டது. அதனை முன்னின்று நடத்தியவர் அவருடைய நெருங்கிய

நண்பரும் எழுத்தாளருமான வீ.செல்வராஜ் ஆகும். பேரவை மூலம் வீ. செல்வராஜ் ஆற்றிய முக்கிய பணி ஆண்டு தோறும் "மலேசியத் தமிழ் இலக்கியம்" என்ற தலைப்பில் சிறுகதைகள், கவிதைகள், ஒரு குறுநாவல் ஆகியவற்றைக் கொண்ட ஒரு தொகுப்பை வெளியிட்டதாகும். இந்தத் தொகுப்புக்களை குறிப்பாக வெளிநாட்டுத் தமிழர்களிடையே மலேசிய இலக்கியத்தை அறிமுகப் படுத்தும் கருவியாக செல்வராஜ் கருதி அப்படியே செயல் படுத்தினார். 1988 – 1994 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆறு தொகுப்புகள் வெளியாகின.

நூல் பதிப்புகள்

1950-களிலிருந்தே இந்த நாட்டின் எழுத்தாளர்கள் மிகுந்த சிரமங்களுக்கிடையில் புத்தகப் பதிப்புக்களை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். கட்டுரைத் தொகுப்புகள், ஆய்வு நூல்கள், கவிதைத் தொகுப்புகள், காவியங்கள், சிறுகதைத் தொகுப்புகள், நாவல்கள், புதுக்கவிதைத் தொகுப்புகள் ஆகியவை காலந்தோறும் பதிப்பிக்கப்பட்டு மலேசியத் தமிழ் இலக்கியத்திற்குச் செழுமை சேர்த்துள்ளன.

1995-இல் இலங்கை எழுத்தாளரான மாத்தளை சோமு, மலேசியச் சிறுகதைகள் சிலவற்றைத் தொகுத்து "மலேசியத் தமிழ் உலகச் சிறுகதைகள்' என்னும் தலைப்பில் தமிழ் நாட்டில் பதிப்பித்தார். இந்தத் தொகுப்பு பின்னர் மலேசிய இடை நிலைப் பள்ளிகளில் பாடப் புத்தகமாகவும் வைக்கப் பட்டது.

1998-இல் "மலேசிய நண்பன்" நாளிதழ் சிறந்த எழுத்தாளர்கள் பதின்மூவரை அழைத்து சிறுகதைகள் எழுதச் சொல்லி அவர்களுக்கு ஆளுக்கொரு உயர்ந்த ரகக் கடிகாரத்தையும் பரிசாக அளித்தது. "கடிகாரக் கதைகள்" என்ற தொடரில் வெளியான இக்கதைகளைப் பின்னர் "சமுதாயக் கதைகள்" (1999) என்னும் தலைப்பில் ஒரு தொகுப்பாக வெளியிட்டு அதற்குப் பெரும் வெளியீட்டு விழாவையும் நடத்தியது.

2003-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் பழம்பெரும் இதழான "கலைமகள்" ஆசிரியர் கீழாம்பூர் அவர்களின் முயற்சியில் 32 மலேசியச் சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புகள் "மலேசியச் சிறுகதைகள்" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டன.

ஆண்டு தோறும் விருதுகள்:

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 1998 முதல் காலஞ் சென்ற அமைச்சர் டான் ஸ்ரீ மாணிக்கவாசகம் அவர்கள் நினைவாக ஆண்டின் ஒரு சிறந்த நூலுக்கு "டான் ஸ்ரீ மாணிக்கவாசகம் புத்தகப் பரிசு" என்ற பெயரில் சான்றிதழும் 5000 ரிங்கிட் ரொக்கமும் அளித்துக் கௌரவித்து வருகிறது. இந்தப் பரிசை இதுவரை வென்றவர்கள்: "மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" என்னும் நூலுக்காக முரசு நெடுமாறன் (1998); "அந்திம காலம்" நாவலுக்காக ரெ.கார்த்திகேசு (1999); "சமுதாயச் சீர்கேட்டுக்கு வித்திடும் காதல், மணவாழ்க்கை, குழந்தை வளர்ப்பு: சிக்கலும் தீர்வும்" என்னும் ஆய்வுக் கட்டுரை நூலுக்காக கே.எம்.குணா (2000); "அமாவாசை நிலவு" நாவலுக்காக மா. இராமையா (2001); "ஆர். சண்முகம் கதைகள்" சிறுகதைத் தொகுப்புக்காக ஆர். சண்முகம் (2002); "செய்கு கனான் காவியம்" நூலுக்காக ப.மு.அன்வர் (2003), "மனமே சுகமே" கட்டுரை நூலுக்காக சுவாமி பிரம்மானந்த சரஸ்வதி (2004); "ஊசி இலை மரம்" சிறுகதைத் தொகுபுக்காக ரெ.கார்த்திகேசு (2005).

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 1983 தொடங்கி எழுத்தாளர்களுக்கும் எழுத்துத் துறைக்குப் பணி புரிந்தவர்களுக்கும் ஆண்டு தோறும் தங்கப் பதக்கங்கள் வழங்கிப் பெருமைப் படுத்தி வருகிறது. இவை மலேசியாவில் தமிழுக்குத் தொண்டாற்றி மறைந்த பெரியவர்கள் பெயர்களில் வழங்கப் படுகின்றன: மலாயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறையின் தலைவராகப் பணியாற்றிய தமிழறிஞர் பேராசிரியர் தனிநாயக அடிகளார், தமிழர் திருநாளின் தந்தை தமிழவேள்

கோ.சாரங்கபாணி, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அடிநாள் தலைவரும் பத்திரிகையாசிரியருமான திரு சி.வீ.குப்புசாமி, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் பத்திரிகையாசிரியரும் இலக்கியவாதியுமான முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன், தமிழ் இளைஞர் மணி மன்றத்தின் தலைவரும் கலைஞரும் எழுத்தாளருமான சமூகக் கலைமாமணி சா.ஆ.அன்பானந்தன் ஆகியோரின் நினைவாக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. இதுவரை சுமார் 80 பேருக்கு இவ்விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்க ஏற்பாட்டில் மறைந்த பத்திரிகாசிரியரும் அரசியல்வாதியும் அமைச்சருமான டான் ஸ்ரீ ஆதிநாகப்பன் பெயரிலும் அவருடைய குடும்பத்தாரின் ஆதரவுடன் ஆண்டு தோறும் விருதுகளும் நிதியும் அளிக்கப்படுகிறது. இது தமிழ் எழுத்து, பண்பாடு, கலை என்ற பிரிவுகளில் சிறந்தவர்களுக்கு அளிக்கப் படுகிறது. இதுவரை ஏறக் குறைய 45 பேர் இந்தப் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

மலேசிய பாரதிதாசன் இலக்கிய அமைப்பும் ஆண்டு தோறும் பெரிய அளவில் “எழுத்தாளர் தினம்” ஒன்றினை நடத்தி எழுத்தாளர்களுக்கு விருதுகள் அளித்துக் கௌரவித்து வருகிறது. இவற்றுள் சிறந்ததாக சங்கிலிமுத்து – அங்கம்மாள் விருது ஒவ்வொரு ஆண்டும் 5000 ரிங்கிட் பணத்துடன் அளிக்கப்பட்டு வருகிறது.

இவற்றோடு மலேசியப் படைப்பாளர்கள் சங்கம் வழங்கும் டத்தோ பத்மனாதன் விருதும், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கங்களின் பேரவை தனது ஆண்டுக் கூட்டத்தின் போது வழங்கும் விருதுகளும் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து முயற்சிகளுக்குப் பெரும் தூண்டுகோல்களாக விளங்கி வருகின்றன.

முடிவுரை:

தமிழ் நாட்டுக்கு வெளியே இலங்கையைத் தவிர்த்து மலேசியாவில்தான் தமிழ் இலக்கிய உற்பத்தி அடர்த்தியாக இருக்கிறது. மலேசியத் தமிழ் நாளிதழ்களும் காலவாரி இதழ்களும் படைப்பிலக்கியத்துக்கு மிகச் சிறந்த ஆதரவை அளித்து வருகின்றன. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் இந்நாட்டில் படைப்பிலக்கியத்தை செழுமைப் படுத்த தொடர்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மலேசியத் தமிழ் சமுதாயத்தில் தீவிரமான தமிழ்ப் பற்றும் தமிழைக் காலங் காலமாக வாழ வைக்க வேண்டும் என்னும் அர்ப்பணிப்பு உணர்வும் உள்ளன. இவை தொடர்ந்து நிலைத்திருக்கும் வரையிலும் படைப்பிலக்கியச் செழுமை தொடர்ந்து அதிகரித்தே வரும்.

(முடிந்தது)

நன்றி: தமிழ் சிஃபி – தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ் 2006

மலேசியத் தமிழ் இலக்கியம் 125 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்டது. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பத்திரிகைகள் மற்றும் வாய்மொழிப் பாடல்கள் மூலம் வேரூன்றிய இவ்விலக்கியம், தோட்டப்புறத் தொழிலாளர்களின் வாழ்க்கை, சமூக யதார்த்தம், மற்றும் நவீனத்துவத்தை மையமாகக் கொண்டு நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் வாயிலாக மலர்ச்சி பெற்றுள்ளது.

மலேசிய தமிழ் இலக்கியத்தின் காலக்கட்டம்:

1. தொடக்கக் காலம் (1887 - 1930):

- மலாயாவில் அச்சில் வெளியான முதல் நூலாக 1887-ஆம் ஆண்டு பலவேந்திரம் இராயப்பன் எழுதிய "சத்திய வேத சரித்திர சாரம்" கருதப்படுகிறது.
- இக்காலகட்டத்தில் சமய நூல்கள் மற்றும் நீதி நூல்கள் அதிகம் எழுதப்பட்டன. மேலும், வாய்மொழி இலக்கியமான நாட்டுப்புறப் பாடல்கள் மக்களிடையே வழக்கில் இருந்தன.

2. இதழியல் மற்றும் மறுமலர்ச்சிக் காலம் (1930 - 1956):

- மலேசியத் தமிழ் இலக்கியத்தின் செவிலித்தாயாக விளங்கியவை இக்காலகட்டத்து இதழ்களாகும்.

- 'தமிழ் நேசன்', 'லோகோபகாரி' போன்ற பத்திரிகைகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றின. தேசிய உணர்வு, சுதந்திர வேட்கை, மற்றும் சமூக சீர்திருத்தங்கள் பற்றிய எழுத்துக்கள் இக்காலத்தில் ஆதிக்கம் செலுத்தின.

3. சுதந்திரத்திற்குப் பிந்தைய காலம் (1957 - 1970):

- 1957-இல் மலேசியா சுதந்திரம் அடைந்த பிறகு, மலேசியத் தமிழ் இலக்கியம் புதிய பரிமாணத்தை எட்டியது.
- புதினங்கள் மற்றும் சிறுகதைகள் சமூகச் சிக்கல்களைப் பேசத் தொடங்கின. மலேசிய மண்ணின் மைந்தர்களான எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளில் உள்ளூர் அடையாளத்தை வெளிப்படுத்தினர்.

4. நவீன காலம் (1970 முதல் தற்போது வரை):

- 1970-களில் சீ. முத்துசாமி போன்ற முன்னோடிகள் தோட்டப்புற மக்களின் அவலங்களை யதார்த்தமாகப் பதிவு செய்து நவீன இலக்கியத்திற்கு வித்திட்டனர்.
- 'வல்லினம்' போன்ற நவீன இலக்கிய அமைப்புகள் மற்றும் இதழ்கள் தமிழ் இலக்கியத்தை உலகளாவிய தரம் மற்றும் பரிசோதனை முயற்சிகளுக்கு இட்டுச் சென்றன.
- இக்காலத்தில் பெண்ணியம், உளவியல் சிக்கல்கள், நவீன அரசியல் மற்றும் உலகமயமாக்கல் சார்ந்த படைப்புகள் மிகத் தீவிரமாக எழுதப்பட்டு வருகின்றன.

முக்கிய இலக்கிய ஆளுமைகள்:

- **நாவல் மற்றும் சிறுகதை:** ரெ. கார்த்திகேசு, சீ. முத்துசாமி, கோ. சாரங்கபாணி, ந.ஜெயபாலன்.
- **கவிதை:** கா. பெரியசாமி, அ. சுப்பையா, ஜே.எம். சாலி.

மலேசியத் தமிழ் இலக்கியத்தின் ஆவணங்களைப் பேணவும், எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் போன்ற அமைப்புகள் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மலேசியத் தமிழ் நூல்களுக்கென பிரத்யேகமான நூலகமும் நிறுவப்பட்டுள்ளது.

காணொளிகள்

முனைவர் இரா. தண்டாயுதம் 24-ஆம் சுழற்கிண்ணச் சொற்போர்ப் போட்டி

https://www.youtube.com/watch?v=iqjqUgfN-g8 [58:40]

(😊)(😊) **இரா தண்டாயுதம்** (😊)(😊)